



சீனத்து நீதிக்கதைகள்

No. 2895

சீனத்து நீதிக் கதைகள்

எழுதியவர் :

பெங் சூயே பெங்



மொழிபெயர்த்தவர் :

ரா. நடராஜன்

புதுமைப் பதிப்பகம் (பிரைவேட்) லிமிட்டெட்

காரைக்குடி

முதற் பதிப்பு: 1, ஏப்பிரல் 1957

விலை ரூபா ஒன்று

சாந்தி பிரஸ், சென்னை - 1

முகவுரை

மக்களிடையே நீதியையும் நேர்மையையும் பரப்புவதற்குத் தொன்று தொட்டே கதைகளை அறிஞர்கள் பயன்படுத்திவந்திருக் கிறார்கள். பொய் சொல்லாதே, திருடாதே, பேராசைப்படாதே, பிறரை ஏமாற்றாதே, வலிய வம்புக்குப் போகாதே என்பன போன்ற நீதிகளைப் போதிப்பதற்கும், இவற்றை மீறி நடந்தால் அதனால் வாழ்க்கையில் ஏற்படுகிற இன்னல்களை எடுத்துக்காட் டுவதற்கும் கதைகள் பயன்பட்டு வந்திருக்கின்றன. இத்தகைய கதைளில் ஈசாப்பு என்பவர் எழுதியுள்ள கதைகள் உலகப் பிரசித்தம் வாய்ந்தவை யாகும்.

அடுத்தபடியாக இன்னொரு வகையான கதைகள் உண்டு; பிறர் செய்யும் சூழ்ச்சிகளிலிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள் வதற்கு வேண்டிய வழி வகைகளை அந்தக் கதைகள் நமக்கு எடுத் துக் கூறும். இந்த ரகத்தில் பஞ்ச தந்திரக் கதைகள் சிறப்புற்று விளங்குகின்றன.

தற்காலத்தில் வேறு விதமான கதைகள் பிரசித்தமடைந்து வருகின்றன. அரசியலைப் போதிப்பதற்கு அறிஞர்கள் கதைகளைப் பயன்படுத்தி வருகிறார்கள். அண்டை நாடுகள், அயல் நாடுகள், நேச நாடுகள், மக்களின் உரிமை, சட்ட வரம்பு, நீதி பரிபாலனம், புரட்சி, பிரசாரம், எழுத்து உரிமை ஆகியவற்றின் தன்மைகளைக் கதைகள் மூலம் எடுத்து விளக்கி வருகிறார்கள். இத்தகைய கதைத் தொகுப்பில், சீனத்து நீதிக் கதைகள் என்ற இந்தத் தொகுப்பு சிறந்து விளங்குகிறது.

மக்களுடைய நல்வாழ்வுக்கு முட்டுக்கட்டையாக இருந்த பிற் போக்குக்கான பழக்க வழங்களை எல்லாம் தகர்த்து எறிந்துவிட்டு, சீனுவில் மா-சே துங் தலைமையில் புதிய சர்க்கார் ஒன்றை நிறுவி, சீன மக்கள் அதைப் பேணிப் பாதுகாத்து வருகிறார்கள்.

இந்தப் புதிய சர்க்கார் நிறுவப்படுவதற்கு முன்னர், புராதன நாகரிகம் வாய்ந்த சீன நாடு, பிற்போக்குக் கும்பலின் தலைவன் ஜெனரல் சியாங் கே ஷேக் ஆதிக்கத்தின் இருந்துவந்தது. இம்மென் றால் சிறைவாசம் ஏனென்றால் வனவாசம் என்ற நிலை அங்கே அப்பொழுது தலைவிரித்துத் தாண்டவ மாட்டியது. தன் உள்ளத் தில் ஊற்றெடுத்துப் பொங்கி எழுந்த எண்ணங்களைப் பிறருக்கு எடுத்துச் சொல்ல முடியாமல் முற்போக்கு எழுத்தாளன் அன்றைய நிலையில் வருந்தினான். வருத்தம் அதிகரிக்க அதிகரிக்க, மனம்

ஒடிந்து கிடவாமல் தம் கருத்துக்களை இலைமறை காயாக வெளியிட ஏதாவது வழி தென்படுகிதா என்று ஆராய்ந்து பார்த்தான். கதைகள் மூலம் தனது அரசியல் கருத்துக்களை இலைமறை காயாக வெளியிடலாம், அதை மக்களும் தெரிந்துகொள்வார்கள் என்பதை அறிந்துகொண்டான். உடனே உள்ளத்தில் ஊற்றெடுத்துப் பொங்கிய அரசியல் கருத்துகளை கதைகள் மூலம் வெளியிடத் தலைப்பட்டான். அத்தகைய கதைகளைக் கொண்டதே இந்த நூல்.

சியாங் கே ஷேக் சீனுவில் நிலவிய அரசியல் சூழ்நிலைகளுக்கு ஏற்ப, பெங் சூயே பெங் அனேக கதைகளை எழுதி இருக்கிறுர்; அந்தக் கதைகளில் எல்லாம் இலைமறை காயாகத் தன் கருத்துகளை வெளியிட்டு இருக்கிறுர்:

(1) புரட்சி வெள்ளம் கொந்தளித்துப் பெருக்கு எடுக்கும் காலங்களில் பத்தாம் பசலிக் கொள்கைகள் எல்லாம் இருந்த சுவடே தெரியாதபடி மறைந்து போகும் என்பதைக் கிணறும் ஆறும் என்ற கதை நமக்குப் போதிக்கிறது.

(2) கலை என்பது நீதி செழித்து ஓங்குவதற்கும் தீமையைத் தண்டிப்பதற்கும் துணை நிற்பதாய் இருக்க வேண்டும். இதற்குப் புறம்பாக உள்ள கலையை நாம் கலையாகவே கொள்ளுதல் கூடாது ஏன்பதை, பாம்பும் இசையும் என்ற கதை நமக்கு அறிவுறுத்துகிறது.

(3) நீதிக்கும் நேர்மைக்கும் துணையாக இராமல், கூலிக்கு மார் அடிப்பவர்களை மனிதரிடையே காணலாம்; அவர்கள் பெரும் கூப்பாடு போடுவார்கள். அத்தகைய கயவர்களை ஒழித்துக் கட்டுவது அவசியமாகும் என்பதை, முரசடித்த தவளை என்ற கதை எடுத்துக் காட்டுகிறது.

(4) புதிய சீனத்தை, பகைமை யுணர்ச்சிகொண்ட அன்னிய நாடுகள் எப்படி நெருக்கித் திணற வைக்கப் பார்க்கின்றன என்பதை மரத்தை நெறிக்க முயன்ற பாம்பு என்ற கதையும் நேசநாடுகளின் போக்கு என்னவாகும் என்பதை நரியும் நண்டுகளும் என்ற கதையும் நமக்கு எடுத்துக் காட்டுகின்றன .

சீன ஆசிரியர் பெங் சூயே பெங் எழுதி இருக்கும் கதைகளில் சுமார் ஐம்பது கதைகளைத் திரட்டி, பீகிங் அன்னிய மொழிப் பதிப்பகத்தார் ஆங்கிலத்தில் வெளியிட்டு இருக்கிறுர்கள் ; அந்த நூலின் தமிழ் மொழிபெயர்ப்பே இந்த நூல்.


காரைக்குடி
1, ஏப்ரல் 1957

அ. லெ. நடராஜன்.

பொருளடக்கம்

எண்		பக்கம்
1.	கிணறும் ஆறும் ...	1
2.	காலை நேர மேகங்கள் ...	3
3.	பாம்பும் இசையும் ...	5
4.	உழவனும் வானம்பாடியும் ...	7
5.	பறவை, மேகம், மலை ...	11
6.	தச்சனும் காடும் மரமும் ...	12
7.	வைகறை ...	14
8.	கழுகும் பாலைவனமும் ...	17
9.	வேடனும் அவன் மனைவியும் ...	22
10.	முரசடித்த தவளை ...	25
11.	கடலும் செம்படவப் பெண்ணும் ...	27
12.	சிங்கமும் சூரிய அஸ்தமனமும் ...	31
13.	சேற்றில் விழுந்த நரி ...	33
14.	காடும் போர்ப் பன்றியும் ...	35
15.	அரசனாக விரும்பிய வாத்துக் குஞ்சு ...	37
16.	மரத்தை நெறிக்க முயன்ற பாம்பு ...	40
17.	குற்றமுள்ள நெஞ்சு ...	42
18.	எக்காளம் ஊதிய நரி ...	44
19.	குழிமுயல்களின் அறிவீனம் ...	45
20.	ஒரு நரியும் கோழிக் கரியும் ...	48
21.	நரியும் நண்டுகளும் ...	50
22.	நரியும் ஓநாயும் ...	51
23.	பாம்பும் தேனீக்களும் ...	52
24.	நரியும் முயலும் ...	54
25.	குரங்கும் பலகையும் ...	55
26.	பாம்பும் குழிமுயலும் ...	57

கரைகளை உடைத்துக்கொண்டு சுற்றுப்புறங்களில் இருந்தவற்றை எல்லாம் அது மூழ்கடித்துவிட்டது; ஆகவே, கிணறும் அதனுடைய ஆழமும் நிலைத்த வாழ்க்கையும் அதற்குப் பாதுகாப்பாக இருந்த மரக் கூண்டோடு வெள்ளத்தில் மூழ்கிச் சிதறி மறைந்தே போயின.



காலைநேர மேகங்கள்

வெகு காலத்துக்கு முன்னர், கடல் கன்னி ஒருத்தி இருந்தாள்; நாள்தோறும் சூரியோதயத்துக்கு நீண்ட நேரம் முன்னதாகவே அவள் ஒரு தீவுக்குச் சென்று, அங்கேயுள்ள ஒரு குன்றின்மீது அமர்ந்து, சூரியன் உதிப்பதைக் காண அவள் காத்திருப்பது வழக்கம். வெகு நேரத்துக்கு முன்னரே சென்று, காலத்தைத் தன் தங்கை இப்படி வீண் விரையம் செய்கிருள் என்று அவளுடைய அக்கா கருத்துவது உண்டு. ஆகவே, அவள் தன் தலையைக் கடல் மட்டத்துக்கு மேலே நீட்டி ஒவ்வொரு தடவையும் தன் தங்கையைத் தூரத்தில் இருந்தபடியே கடிந்து கோபித்துக்கொள்வாள் :

"ஏ சோம்பேறியே! காலம் என்பது மிகவும் அருமையானது : சூரியன் உதிப்பதற்கு முன்னர் ஏதாவது ஒரு வேலையை நீ கவனிக்கக் கூடாதா? உனது கைகளுக்கு வேலை செய்யக் கசக்கிறதா என்ன?" என்று இடித்துக் கூறுவாள்.

ஆகவே, அவள் தங்கையான அந்தக் கடல் கன்னி, தனக்கு அண்மையிலும் சேய்மையிலும் இருக்கும் மேகங்களையும் மூடுபனிகளையும் தன்பால் இழுத்து, வீட்டினுள் இருந்து நெசவு செய்வதைப் போலவே, தீவிலிருந்தபடியே அந்த மேகங்களையும் மூடுபனியையும் கொண்டு வெகு சாதுரியமாக நெசவு வேலைசெய்தாள்; விரைவில் சூரியன் உதயமானுன்; அவன் செய்த முதல் காரியம் தன் நீண்ட கிரணங்களைப் பாய்ச்சிக் கடலை அளந்ததுதான்.

கடல் கன்னி நெய்த மெல்லிய அந்த மேகவலைப் பின்னலை ஊடுருவிக் கொண்டு சூரிய கிரணங்கள் பாய்ந்தன. உடனே, அதனால் வானவில்லின் நிறங் கள் அத்தனையும் கொண்ட ஒரு வர்ணக் களஞ்சிய மாக அந்த மேகம் மின்னியது.

மேலான ஒரு குறிக்கோளைக்கொண்டு செய் கின்ற எந்த வேலையும் எந்த உழைப்பும் இப்படி அழகுமிக்கதாகவே இருக்கும்.



பாம்பும் இசையும்

ஒரு பாம்பு தான் வசிக்கும் பொந்தைவிட்டுத் தனது தலையை வெளியே நீட்டியபோது, அங்கே இரை தேட வந்திருந்த ஒரு கவுதாரியைக் கண்டு, அதைக் கொன்றுவிட்டது. தன் கணவனின் அகால மரணத்தை அறிய நேர்ந்ததும், அதன் பேடையான பெண் கவுதாரி, அடங்காத சினம் கொண்டது; அது அடைந்த துயரமோ அந்தச் சினத்தையும் மீறி நின்றது; நெஞ்சமே பிளந்துவிடும் அளவுக்கு அது கதறிப் புலம்பியது. அதனுடைய துக்கமும் புலம்பலும் வசந்தகாலக் கானக முழுதும் வியாபித்துப் பரவியபடியால், அந்தக் கானகம் முற்றுமே சோக மயமாக மாறியது.

அப்போது அதன் வழியாகச் செல்லநேர்ந்த சிறந்த இசைவாணன் ஒருவன், இந்தப் பேடையின் புலம்பலைச் செவிமடுத்துக் கேட்டான்; பெண் கவுதாரியின் புலம்பல் அவன் நெஞ்சை உருக்கிவிட்டது. "ஆகா! இந்தப் பேடையின் துயரத்தை இசையைத் தவிர்த்து வேறு எதாலும் சரியாகத் தெரிவிக்க முடியாதே!" என்று எண்ணினான்.

பிறகு, அந்த இசைவாணன் ஒரு மெட்டை அமைத்து, அதைத் தன் கருவியில் வாசித்தான்; அந்த மெட்டு, அடங்காத மனக்கொதிப்பையும், வெறுப்பையும், ஆத்திரத்தையும் வெளிப்படுத்தும் வகையில் அமைந்து இருந்தது. குளிர்மிகுந்த காலை, அமைதியான இரவு, மகிழ்ச்சிதரும் பகற்பொழுது, இவற்றில் எந்த நேரத்தில் கேட்டாலும்

சரி, கேட்பவரின் நெஞ்சம் படபடத்து, ரத்தம் கொதிக்கும் வகையில், அந்த இசையின் மெட்டு அமைந்திருந்தது. இந்த இசையைச் செவிமடுக்க நேர்ந்த ஒவ்வொருவரும் இதனால் ஆத்திரமுற்று, அந்தப் பாம்பைத் தேடிச் சென்றார்கள். அதுமுதல் இது கவுதாரியைக் கொன்ற பாம்புதானா அல்லவா என்பதைக்கூடப் பாராமல், எந்தப் பாம்பைக் கண்டாலும் அதை அவர்கள் அடித்துக் கொன்றே விட்டார்கள்.

நீதிக்குக் கலை துணை நிற்கிறது; தீமைகளை எல்லாம் கண்டிப்பதற்கும் அவற்றை ஒழிப்பதற்கும் சகல மக்களையும் அது ஏவுகிறது.



உழவனும், ஊர்க்குருவிகளும் வானம்பாடிகளும்

ஒரு நாள் ஓர் உழவன் கோதுமையை அறுவடை செய்யத் தன் வயலுக்குச் சென்றான்; அந்தச் சமயத்தில் குருவிக் கூட்டம் ஒன்று பறந்துவந்து, கோதுமைக் கதிர்கள்மீது அமர்ந்தன. அவை அந்த உழவனைப் பார்த்து "ஏ அன்பார்ந்த உழவரே! நெற்றி வியர்வை நிலத்தில் விழப் பாடுபட்டு எங்களுக்கு உணவுதந்து எங்களை நீர் போஷிக்கிறீர் என்பதை நாங்கள் மறந்துவிட வில்லை. உழவர்களுக்கு வேலை அதிகமாகவுள்ள இந்த அழகிய கோடை காலத்தில், இசைவிருந்து அளித்து எங்கள் நன்றியை உமக்குத் தெரிவிக்கவே நாங்கள் வந்திருக்கிறோம். நாங்கள் உமது உற்ற நண்பர்கள் ஆவோம்" என்று கூறின. பின்பு எல்லாக் குருவிகளுமே ஒன்று சேர்ந்து காச்மூச் சென்று கத்திக் கொண்டு, பாட்டோடு பாட்டாக விரைந்து விரைந்து கோதுமைக் கதிர்களைத் தின்று தத்தம் வயிற்றை நிரப்பிக்கொள்ளத் தொடங்கின.

இதைக் கண்டு ஆத்திரமடைந்த உழவன் மண்ணுங் கட்டிகளை எடுத்து எறிந்து அந்தக் குருவிகளை எல்லாம் விரட்டினான். "ஏ நயவஞ்சகம் படைத்த சண்டாளர் கூட்டமே! உங்களை நாங்கள் ஆதரிக்க விரும்புவதாகக் கூறிக்கொண்டே, எங்களை நீங்கள் ஏமாற்றிக் கொள்ளை யடிக்கிறீர்கள்; ஒரு குருவியின் பாடலைக் கேட்பதற்கு, தானியத்தில் ஒரு மணியைக்கூட இழக்க எனக்குச் சம்மதம் இல்லை. அப்படிப்பட்ட கலைப் பைத்தியம் எனக்குக் கிடை

யாது. உங்களைப் போன்ற நண்பர்களின் உறவு எனக்குத் தேவை இல்லை. இப்படிப்பட்ட உளப் பாங்கு கொண்ட கவிஞர்கள் எல்லாரையும் நான் மூட்டையைக் கட்டி வெளியே அனுப்பத்தான் போகிறேன்" என்று சினந்து சொன்னான்.



குருவிகள் பறந்து சென்ற பிறகு, பூச்சிகளைப் பிடித்துத் தின்னும்பொருட்டு, சில வானம்பாடிகள் வந்து அந்தக் கோதுமை நிலத்தில் இறங்கின. இங்கு ஒன்றும் அங்கு ஒன்றுமாகக் கிடைத்த வெட்டுக் கிளி, புழு முதலியவற்றை அவை பிடித்துத் தின்றன. பிறகு, அவை ஆகாயத்தை நோக்கிப் பறந்து சென்றன. கேட்போர் உள்ளம் களித்துக் கூத்தாடும் வண்ணம் சுரசுத்தமாகவும் இனிமையாகவும் பாடிக்கொண்டு அவை ஆகாயத்தை நோக்கிப் பறந்தன. உழவனும் ஒரு கணம் நிமிர்ந்து நின்று

தன் தலையை உயர்த்தி வானத்தை ஒரு முறை பார்த்தான். பிறகு, குனிந்து மறுபடியும் கதிர் அறுக்கத் தொடங்கினான். அப்போது அவன் தனக்குள்ளே, "வானம்பாடிகளே நல்ல பறவைகள் என்று மக்கள் சொல்வது சரியாகத்தான் இருக்கிறது. அவற்றுக்கு உணவு அளிப்பதற்காக நாம் ஒன்றும் செலவிடத் தேவை இல்லை ; அதுவுமல்லாமல் பயிரை நாசம் செய்யும் பூச்சிகளைக் கொன்று, நமக்கு அவை உதவி செய்கின்றன. பிறகு, வேகமாகவும் இலாகவமாகவும் மகிழ்ச்சியோடும் ஆகாயத்தில் பறந்து பாடி நமக்கு இன்பத்தை ஊட்டுகின்றன ; அவை எதற்கும் தற்பெருமை யடித்துக்கொள்வது இல்லை. அவற்றைப் பார்ப்பதே கண்ணுக்கு விருந்தாக அமைகிறது. அவற்றின் பாட்டினுல்தான் இந்த நீலவானமே பண்டைக்கப்பட்டு இருக்கிறதோ என்று எண்ணுமாறு, அவ்வளவு இனிமையாகவும் சுத்தமாகவும் அவை பாடுகின்றன. ஆகா ! இத்தகைய புலவர்களே பொதுஜனங்களின் உண்மையான நண்பர்கள் ஆவர்" என்று கூறினான்.

பறவை, மேகம், மலை

வானில் உயரப் பறந்துகொண்டிருந்த பறவை ஒன்று ஊக்கம் அடைந்து "அதோ தெரிகிற அந்த வெண்முகிலையே எனது இலக்காகக் கொள்வேன். வேகமாகப் பறந்து சென்று அதை நான் தொட்டுப் பிடிப்பேன்" என்றது.

பிறகு, தனது இறக்கைகளைக் கோதிவிட்டுக் கொண்டு, முழு வலிமையோடு முன்னேறி வேகமாகப் பறந்தது.

ஆனால், வெண்முகிலோ சிறிது நேரம் கிழக்கிலும் சிறிது நேரம் மேற்கிலுமாகத் தனது மனம் போனபடி அலைவதும் சில சமயங்களில் திடீரென ஓர் இடத்திலேயே நின்றுவிடுவதுமாக இருந்தது. பிறகு, ஈக்களைப் பிடிக்கச் சுற்றிச் சுற்றித் திரியும் பெருமைபடைத்த செல்லப் பூனைபோல, அந்த மேகம், வளைந்து நெளிந்து சுழன்று சுழன்று திரிந்தது. மீண்டும், மெல்லிய பட்டாடையினால் தன்னைப் போர்த்துக்கொண்டிருக்கும் கர்வமுள்ள சோம்பேறிப் பெண் ஒருத்தி, தனது அழகிய மெல்லிய உடலை நெளித்துக் கொடுப்பதுபோல், அந்தச் சுழல் மேகம் மெதுவாக விரிந்து பரவியது; இன்னும் மோசமாக, திடீரென்று, சிதறிப் பரவிக் கண்ணுக்குத் தெரியாமல் அந்த மேகம் முற்றுமே மறைந்து போயிற்று.

இதைக் கவனித்த அந்தப் பறவை, "இந்த இலட்சியம் நமக்குச் சரிப்பட்டு வராது. இனி எனது குறிக்கோளாக அதோ தெரிகிற உயரமான

மலை உச்சிகளையே கொள்வேன்; அவை, உறுதியும் வளமையும் பெருமையும் அழகும் பெற்றுத் திகழ் கின்றன. அவற்றைக் காண்பதால் எனக்கும் வலி மையும் தைரியமும் ஏற்படும்; அவற்றின் உச்சிமீது பறந்து பறந்து திரியும்போது எனக்குப் பெரு மகிழ்ச்சி உண்டாகும். ஒரு மலை யுச்சியிலிருந்து மற்றொரு மலையுச்சிக்கு நான் பறக்கும்போது, ஒரு அரக்கனுடைய கிரீடத்திலிருந்து மறு அரக்க னுடைய கிரீடத்துக்குத் தாவிச் செல்வது போன்ற உணர்ச்சி எனக்கு ஏற்படும்'' என்று சொல்லிக் கொண்டது.

உண்மையான பொதுநலத்துக்கு வீரமாகப் பாடுபடும்பொழுது, சரித்திரம் காட்டுகிற தெளி வான உறுதியான வழிகளையே நாம் பின்பற்ற வேண்டும்.

தச்சனும் காடும் மரமும்

கட்டிடத்துக்குப் பயன்படக் கூடிய நல்ல ரக மரம் ஏதாவது ஒன்று பெரிதாகக் கிடைக்குமா என்ற எண்ணத்துடன், காடு முழுதும் ஒரு தச்சன் தேடி யலேந்தான். எவ்வளவு தேடியும் அவனது நோக்கத்துக்கு ஏற்ற சரியான மரம் தென்பட வில்லே.

"எல்லா மரங்களும் ஒரே அளவில்தானே இருக்கின்றன; ஓங்கிப் பருத்து வளர்ந்த சரியான மரம் ஒன்ருவது தென்படக் காணேமே" என்று மனம் நொந்து வருந்திய அவன் "சரி. திரும்பிப் போவோம்" என்று நினேத்தான். அப்போது தன் தேவைக்கு ஏற்ற சரியான மரம் ஒன்று காட்டின் மறு கோடியில் நிற்பதைக் கண்டான். மகிழ்ச்சியும் வியப்பும் ஒருங்கே கொண்டவனுய் "ஆகா! இதோ இருக்கிறதே நான் தேடிவந்த சரியான மரம். இதற்கு ஈடான மரம் இந்தக் காடு முழுவதும் கிடை யாது" என்று சொல்லிக்கொண்டான் அந்தத் தச்சன்.

அப்போது அந்த மரம் அவனேப் பார்த்து, "ஏ தச்சனே! நீ இப்படி நினேப்பது தவறு. 'தனிச் சிறப்பு அற்றவர்கள்' என்பதாக எங்களே இகழ்ந்து உரைக்கிற மட்ட ரகமான பேர்வழிகள் எழுதியுள்ள நூல்களேயே நீயும் படித்திருப்பாய் போலும். அதனுல்தான் உனக்கு இந்த எண்ணம் ஏற்படுகிறது. எங்கள் கூட்டத்தில் நான் பின் வரிசையில் நின்ருலும் இந்தக் கூட்டத்தைச் சேர்ந்த

வன்தான்! தனி மரம் மட்டும் தோப்பு ஆகமாட்டாது என்பதை அறிந்தவன் நான்; ஒரு கட்டிடத்தையே தாங்கக்கூடிய தனிப் பெருமை எனக்கு இருக்கிறது எனினும், என் வர்க்கத்தாரோடு சேர்ந்திருக்கிற பெருமையைக் காட்டிலும் இந்தப் பெருமை எனக்குச் சிறந்த பெருமையன்று; இது பெருமைக்குரியதல்ல என்று உனக்குத் தோன்றுமாயின் எங்களிடமுள்ள மற்ற எதுவுமே உனக்குப் பெருமைக்குரியதாகத் தோன்ருது; அப்படியன்றிப் பெருமைக்குரியது என்று தோன்றுமாயின்,எங்கள் வர்க்கத்தைச் சேர்ந்த ஒவ்வொருவருமே பெருமைக்கும் மதிப்புக்கும் உரியவர்கள் ஆவர்'' என்று கூறியது.

பாட்டாளி மக்களேயும் அவர்களின் மேதையையும்பற்றி இவ்வாறே மதிப்பிடவேண்டும் என்ற கருத்து உடையவன் நான்.

வைகறை

நாள்தோறும் கிழக்கு வெளுக்கவும் காட்டில் வாழும் பறவைகள், எல்லாம் கத்தத் தொடங்கி, மரங்களின் உச்சிக்குப் பறக்கின்றன; கிளைக்குக் கிளை தாவுகின்றன; ஓயாது ஒழியாது பாட்டுக் களைப் பொழிகின்றன. சில பறவைகள் வானத் தில் உயரப் பறக்கின்றன; 'சூரியன் கிளம்பப் போகிருன் ; இதோ வைகறை' என்று ஒன்ருே டொன்று கூறிக்கொள்கின்றன; இப்படியும் ஒரு அழகான விடியற் காலம்!

ஆனல், ஒரு புள்ளிவிரியன் பாம்போடு துணிந்து தமாஷாக இரவு முழுதும் விளையாடிவிட்டு, அயர்ந்து தூங்கிக்கொண் டிருந்த அணில் பிள்ளை ஒன்று, பறவைகளின் கூச்சலினல் தூக்கம் கலைந்து கண் விழித்து, அந்தப் பறவைகளைக் கோபத்துடன் திட்டிற்று.

"ஏ பறவைகளே! உங்களுடைய பொந்து களுக்குச் செல்லுங்கள்; 'விடியல், விடியல்' என்று விடாமல் இப்படி ஏன் தொண்டை கிழியக் கத்து கிறீர்கள்? நாள்தோறும் விடியல் என்பது ஏற்படத் தானே செய்கிறது? ஏதோ ஒரு அதிசயத்தைக் கண்டுவிட்டதுபோல் இப்படி ஏன் கூத்தடிக்கிறீர் கள்? அதைப் பார்ப்பதிலும் அதைப்பற்றிப் பேசு வதிலும் உங்களுக்கு அலுப்பே தட்டவில்லையா?" என்று கேட்டது.

தாங்கள் போட்ட கூச்சலால், இந்தச் சொற் கள் பறவைகளின் காதில் விழவே இல்லை. மேலும்

மும்முரமாக அவை கூச்சலிட்டுக்கொண்டிருந்தன.

அணிலின் இந்த வார்த்தைகளைச் செவிமடுத்த ஒரு மரம் அதன்மீது சினந்து, "நண்பனே! மற்ற விஷயங்கள் என்றால் நான் பேசாமல் இருந்திருப்பேன்; ஆனால் விடியல் காலத்தை வெறுப்போடு கேவலமாக இகழ்ந்து உரைப்பது என்றால் அதை என்னால் பொறுத்துக்கொண்டிருக்க முடியாது; சூரியோதயத்தைக் கண்டு ஜனங்கள் எப்படி அலுப்படைய முடியும்?" என்று கேட்டது.

அங்கே கிடந்த குண்டுப் பாறை ஒன்றும் இந்த உரையாடலில் இடையே கலந்துகொண்டது. "உண்மைதான்! கல்விமான்கள் சிலரின் கணக்குப்படி, எனக்கு வயது ஐந்து லட்சம் வருடங்களுக்கு மேலாகிறது. இவ்வளவு காலம் இருந்தும் சூரியோதயத்தைக் காண்பதில் எனக்குச் சலிப்புத் தட்டியதே கிடையாது" என்று கூறியது.

இதைக் கேட்ட ஒரு தவளை அருகில் இருந்த குளத்தில் இருந்தபடியே "அது கூறுவது உண்மை; சூரியோதயம் என்றும் புதிதாகவேதான் இருக்கும்" என்று கூறிற்று.

இதைக் கேட்டதும் வேகமாக ஒரு புழு நெளிந்து நெளிந்து வந்து தன் தலையைத் தூக்கிற்று. "சூரியோதயத்தைக் கண்டு சலிப்படைபவர்களும் யாராவது உண்டா? அப்படிச் சொன்னது அந்தப் போக்கிரி அணில் பிள்ளைதானே? ஒரு நிமிஷம் கூட நான் அப்படித் தப்பாக எண்ணவே மாட்டேன்" என்று பெருமூச்சுவிட்டவாறே கூறியது.

உடனே வானம் சிவந்து வெளுத்தது. பூமியோ மரகதப் பச்சையாக மாறியது; வகை வகையான

ஒலிகள் எங்கும் முழங்கின; பழுக்கச் சுட்ட பணியாரம் போல, சூரியன் ஜோதிப் பிழம்பாகப் பிரகாசித்தான். அதை வலைபோல வளைத்துக்கொண்டது மேகக் கூட்டம்; கண்கள் யாவும் சூரியனை நோக்கின; உடனே மெல்லிய மேகத் திரையை விட்டு நழுவி, மகிழ்ச்சியும் குறும்பும் தவழும் தனது முகத்தைச் சூரியன் வெளியே காட்டினான்; பொதுவாக யாரோ ஒருவரிடம் தனது குறும்பைக் காட்ட விரும்புவன் போலவும், குறிப்பாக இறக்கைகளைச் சப்திக்கும் பறவைகளிடம் தன் குறும்பைக் காட்ட விரும்புபவன் போலவும் தோன்றினான் சூரியன்; எல்லா ஜீவஜந்துக்களும் கூச்சலிட்டுச் சிரித்தன; பறவைகளின் பாட்டுக்கள் பெரு முழக்கமாக முழங்கின. பிறகு, அவை முழக்கமிட்டுக்கொண்டு, ஆகாயத்தின் நாலா திசைகளுக்கும் சிதறிப் பறந்தன.

போக்கிரியான அந்தச் சின்ன அணில் பிள்ளையும் தூங்கி எழுந்தது. தனது கண்களைத் துடைத்துக்கொண்டே "இன்று சூரியோதயம் அழகாகத்தானே இருக்கிறது" என்று கூறியது.

கழுகும் பாலைவனமும்

காடுகளோ நீரூற்றுகளோ இல்லாத ஒரு பாலைவனத்தில், ஒரு கழுகு வாழ்ந்து வந்தது. அந்தக் கழுகு வானில் உயர வட்டமிட்டுப் பறந்து, தனக்குத் தேவையானவற்றைக் காண முடிகிறதா என்று பார்த்தது. கீழ்த் திசையிலே எல்லையற்ற கடல் பரந்து விரிந்திருப்பதையும், வட திசையிலே அடர்ந்த காடு நூற்றுக் கணக்கான மைல்கள்வரை, பரவியிருப்பதையும், மேல் திசையிலே கண்கவர் நிறத்திலே மேகங்கள் பறந்துகொண்டும் ஆடிக்கொண்டும் நிறங்களை மாற்றிக்கொண்டும் திரிவதையும், தென் திசையிலே பசிய பூமி, வெல்வெட்டுப்போல, மென்மைவாய்ந்ததாக இருப்பதையும், கண்டது.

பின்னர், அந்தக் கழுகு நீரைத் தேடிக் கிழக்கே பறந்தது. போக ஆயிரம் மைல் திரும்ப ஆயிரம் மைல் அது பறக்க வேண்டியிருந்தது; பறந்து வந்து பாலைவனத்தில் இரவைக்கழித்தது. வட திசைக்குக் குச்சிகள் கொண்டுவரச் சென்றபோதும் போக வர ஈராயிரம் மைல் பறந்து பறந்து பாலைவனத்தில் இரவைக் கழித்தது. தெற்கிலோ மேற்கிலோ எந்தத் திசை சென்றாலும் ஒவ்வொரு திசைக்கும் சென்று திரும்பித் தன் கூட்டுக்கு வந்தடைய ஈராயிரம் மைல் அது பறக்க வேண்டியது இருந்தது.

எந்த நேரமும் ஒரேபடியாக இப்படி உழைத்துக்கொண்டே யிருந்ததால் அந்தக் கழுகு களைத்துவிட்டது. இதைக் கண்ட கீழ்த் திசைக் கடல் அந்தக் கழுகை நோக்கி, "நீ ஏன் இவ்வாறு வருந்தி

அலைகிறாய்? எனது பரப்பைக் காண விரும்பினால் உயரப் பறந்து பார். கண்ணுக்கு எட்டிய தூரம் வரை நன்றாகப் பார். எனது பரப்புச் சிறிதல்ல. என் ஆளுகையில் அதிசயமான தீவுகளும் ராட்சஸ முதலைகளும் மீன்களும் பயங்கரமான கடல் பிராணிகளும் இருக்கின்றன. உனக்குப் புயல் காற்றுப் பிடிக்குமா? அப்படியானால் கொஞ்சம் பொறு. சீக்கிரம் இங்கே ஒரு புயல் வரும். உனக்கு வேடிக்கை தரக்கூடிய அளவுக்குப் பெரும் புயலாக அது இருக்கும். அந்தி மாலை வந்ததும், ஏதாவது ஒரு கடல் குகையில் தங்கி நீ இளைப்பாறலாம்" என்றது.

ஆனால், அந்தக் கழுகோ "போய்வருகிறேன். நாளைக்குத் திரும்பி வந்து பார்க்கிறேன்" என்று கூறித் தண்ணீரை எடுத்துக்கொண்டு கடல்மீது சிறிது நேரம் பறந்து, தான் வாழ்கின்ற பாலை வனத்துக்கே திரும்பியது.

வடக்கில் இருந்த காடும் கழுகைப் பிரியத்துடன் வேண்டிக்கொண்டது: "நண்பனே! இன்னும் சிறிது அதிகமாக இங்கு நீ தங்கியிரு; நேரம் அதிகமாகிவிட்டபடியால் இரவுப் பொழுதை இங்கேயே நீ கழிக்கலாம். என்னுடைய வனம் உனக்குப் பிடித்திருக்கிறதா? இந்தக் காட்டின் சிறப்பு என்ன தெரியுமா? பழங்காலம் தொட்டு இன்று வரை இந்தக் காட்டைக் கடந்து எல்லை தாண்டியவர் யாருமே இல்லை. இது ஒரு பரந்த இராச்சியம். இங்குள்ளவர்கள் பரம யோக்கியர்கள்; நட்புக்கு உகந்தவர்கள். இவர்களின் ஒரே ஒரு குறைபாடு என்னவென்றால் ஆண்களுக்கு ஆடுவதிலே மோகம். பெண்களுக்குப் பாடுவதிலே மோகம். நீ அவர்களைக்கண்டு

பேச விரும்பினால் நான் உன்னை ஆடும் கரடியுடனும் பாடும் குயிலுடனும் அறிமுகம் செய்து வைக்கிறேன். நீ இங்குச் சில நாட்கள் தங்க வேண்டுமென்பது என் ஆசை; இங்கே நீ இரவை நல்ல விதமாகக் கழிக்கலாம். உறங்குவதற்காகக் கண்களை மூடின உடனேயே எல்லையற்ற காட்டைப் பற்றி நீ கனவு காண்பாய். கோடை காலப் பசுமை வேண்டுமா? அல்லது குளிர் காலப் பனியின் வெண்மை வேண்டுமா? எது வேண்டுமாயினும் எல்லையற்ற அளவில் அதை நீ இங்கே காணலாம்" என்றது.

ஆனால், கழுகோ முன்போலவே "போய் வருகிறேன்; மீண்டும் நாளை வருகிறேன்" என்று கூறித் தன் அலகில் ஒரு குச்சியைக் கௌவிக்கொண்டு, வட்டமிட்டுப் பறந்து, தனது இல்லமாகிய பாலைவனத்துக்கே திரும்பியது.

மலரொளி வண்ணம் தோய்ந்த மேற்கத்திய மேகங்கள் கழுகை வசியம் பண்ணத் தங்களுடைய கவர்ச்சி எல்லாம் காட்டியிழுத்தன. "எங்களோடு இன்னும் கொஞ்சம் ஆடு; இப்படியே மேலும் மேலும் ஆடிக் களிப்போம்; கீழே இறங்காமல் மேல் திசை வான முழுதும் ஆடுவோம்; உன்னுடன் கூடியிருப்பதில் எவ்வளவு மகிழ்ச்சி அடைகிறோம் தெரியுமா?" என்றன.

நேரம் பற்றாத பிரயாணிகளைப்போல, கழுகும் பிரகாசமான அந்த மேல் திசை மேகங்களுடன் சிறிது நேரம் பறந்து சென்ற பின், "போய் வருகிறேன். உங்களின் அழகே அழகு" என்று கூறிற்று.

தெற்கே யிருந்த பசிய பூமியும் தன்னை அது மிக அழகுபடுத்திக்கொண்டதைப் பார்த்தால், இள

வேனில் வந்துவிட்டதோ எனும்படியாக இருந்தது. அது கழுகை நோக்கி "நீ ஏன் எங்கள் தலைக்கு மேல் அவசர அவசரமாக வட்டமிட்டுப் பறந்து செல்கிறாய்? சற்றுக் கீழே இறங்கு. வாழ்வுக்குச் சுவை தருவது சூரிய ஒளியா? அல்லது நமது உழைப்பா? அல்லது காதலா என்பதுபற்றிச் சிறிது கலந்து உரையாடுவோம், வா" என்றது.

"நல்லது, நான் இளவேனிலின் எழிலை உணர்கிறேன். இருப்பினும், சென்று வருகிறேன்; திரும்பி வருவேன்" என்று கூறியது அந்தக் கழுகு.

அன்றிரவு கழுகு பாலைவனத்திலுள்ள தனது கூட்டில் படுத்து உறங்கிற்று. பகலில், தான் அடைந்த கிளர்ச்சியின் மோதல்களால் நெடுநேரம் கண்ணுறங்காமல் படுத்திருந்தது. அது தனக்குத் தானே சொல்லிக்கொண்டதாவது: "உண்மையாகவே எனக்கு வேலைகள் பன்மடங்கு பெருகிவிட்டன. பலனற்ற காரியத்துக்காக ஓடியாடிப் பிரமாதமாக எப்பொழுதும் நான் அலைபவன் ஆகிவிட்டேன்; இருந்தாலும் வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்கு ஆகிய நாற்றிசைகளையும் நான் விரும்புகிறேன்; அவை யாவும் அதிக அழகாயிருக்கின்றன. ஆனால், இரவு நேரத்தில் பாலைவனத்தில் கமழும் மணல் வாடையை என்னால் கைவிட இயலவில்லை. விடியற் காலத்தில் பாலைவனத்தே உயரப் பறந்து வட்டமிடும் இன்பத்தையும் என்னால் துறக்க முடியாது. கடலிலிருந்து நீரையும் காட்டிலிருந்து குச்சிகளையும் மேற்கிலிருந்து மேகங்களையும் தெற்கிலிருந்து இளவேனிலையும் என்னுடைய பாலைவனத்திற்குக் கொண்டுவரவே நான் முயலுகிறேன். இது தான் உண்மை. ஆகையால், நான் இன்னும் அதிக

மாகவே உழைக்க வேண்டும். எது எப்படியானாலும் சரி, இதை நான் செய்தே தீருவேன். எனது திட்டத்தை நிறைவேற்றுவேன் என்பது திண்ணம். என்னுடைய அருமையான இந்தப் பாலைவனம், ஊற்றுகளும் காடுகளும் உடையதாகக்கூடிய அந்த நாளும் வரத்தான் செய்யும்; சாத்தியமான இந்த நோக்கம், கற்பனைக் கனவுபோலத் தோன்றலாம்; ஆயினும், அது நனவு ஆகாமல் போகாது. இந்த நோக்கத்தின் ஒரு நினைப்பே எனக்கு ஆனந்தத்தை உண்டுபண்ணுகிறது."

இவ்வாறு வழக்கம்போல அந்தக் கழுகு நெடுந் தூரம் பறந்து சென்று திரும்பிவந்துகொண் டிருந்தது. அது ஒரு கஷ்டமாகவே அதற்குத் தோன்றவில்லை.



வேடனும் அவன் மனைவியும்

ஒரு காலத்தில் துணிச்சல் மிகுந்த வேடன் ஒருவன் இருந்தான். அன்பாகவும் நட்புரிமையோடும் யாவரிடத்தும் அவன் கலந்து பழகுவான். அவனுடைய மனைவி தன் கணவனைப்பற்றி மற்றவர்களிடம் புகழ்ந்து சொல்லிக்கொண்டேயிருப்பாள்: "என் கணவர் உண்மையாகவே நிரம்ப நல்லவர். நாங்கள் மிக ஒற்றுமையாக வாழ்கிறோம். அவர் விடைபெற்றுக்கொண்டு வெளியே செல்லும் போது நிரம்பப் பிரியத்துடன் சொல்லிக்கொண்டு போவார். திரும்பி வந்த பின்னரும் நிரம்பப் பிரியத்துடன் நடந்துகொள்வார்; அவரைப்பற்றிய நினைப்பே இல்லாமல் என்னால் இருக்க முடிவதே இல்லை" என்பாள்.

ஒரு நாள் வெளியே சென்ற வேடன் நள்ளிரவு வரை வீட்டுக்குத் திரும்பவில்லை. அவனைப்பற்றிய தகவலும் அவனுடைய இல்லாளுக்குக் கிடைக்கவில்லை. நெடு நேரமாகியும் அவன் திரும்பாததற்குக் காரணம் என்னவென்றால்: காட்டிலே பயங்கரமான கொடிய விலங்கை ஒன்றைக் கண்டு அதனுடன் அவன் நீண்டநேரம்போராடும்படியாயிற்று. அதனிடமிருந்து தப்பிப் பிழைப்பதே அவனுக்குப் பெரும்பாடாகிவிட்டது. பிறகு மனம் ஒடிந்து, கவலையுடன் அவன் வீடு திரும்பினான். வந்தவன் தன் மனையாளிடம் அன்பாக நடந்துகொள்ளவில்லை. அவளுடைய உறவையும் அவன் விரும்பி நாடவில்லை. ஏதோ உணர்ச்சியற்றவன்போல அவன் இருந்

தான். அவனது மனைவியோ அவனிடம் அன்பு காட்டி, பரிவுடன் நடந்துகொண்டு அவனுடைய பிரியத்தைப் பெற முயன்றாள். அது பலன் அளிக்கவில்லை. இந்த நிலைமையைப் பொறுக்காதவளாகித் துயரம் பெருகி, அவன் மனைவி அழுதாள்; அலறினாள்; கதறினாள்; என்ன செய்தும் பலன் இல்லை.

இதன் பின்னர் அவளும் அவ்வாறே மௌனம் பூண்டு, துயரம் தோய்ந்து, மனம் ஒடிந்து, உணர்ச்சியற்றவளாகிவிட்டாள்.

மீண்டும் ஒரு நாள் அந்த வேடன் வேட்டைக்குச் சென்றான். சென்றவன் நள்ளிரவுவரை வீட்டுக்குத் திரும்பவில்லை. பிறகு, திரும்பி வந்து வீட்டுக்குள் நுழைந்தானோ இல்லையோ, உடனே தன் மனையாளைக் கட்டித் தழுவிக்கொண்டு குதித்துக் கூத்தாடத் தொடங்கினான். சந்தோஷ மிகுதியால் கிறுக்கன் போல அவளைக் கட்டிப்பிடித்தபடியே குதித்துக் குதித்துக்கொண்டு அவன் இருந்தபடியால் மூர்ச்சித்துக் கீழே விழுகின்ற நிலைமைக்கு அவள் வந்துவிட்டாள்.

"ஏ, பெண்ணே! எழுந்திரு; மகிழ்ச்சியோடிருப்போம், மகிழ்ச்சியோடிருப்போம்" என்று கூவினான் அந்த வேடன்; அவன் போட்ட சப்தத்தில் அவர்கள் இருந்த அறையே கிடுகிடுத்துவிட்டது; அண்டை அயலார்கள் எல்லாரும் விஷயம் என்ன என்று பார்ப்பதற்கு ஓடி வந்தார்கள், வந்தவர்கள், காட்டிலே வேடன் வேட்டையாடிக் கொணர்ந்த கொடிய விலங்கின் இறந்த உடல் ஒன்று அவன் வீட்டின் முற்றத்தில் கிடப்பதைக் கண்டார்கள்.

வாழ்வில் நாம் எல்லாரும் நாடுவது என்ன? மகிழ்ச்சி என்பது சொல்லாமலே விளங்கும். மற்றவர்களைக் காட்டிலும் பாடுபட்டு உழைக்கும் மக்களுக்குத்தான் அன்பும் ஆனந்தமும் அதிகமாகத் தேவைப்படுவன அல்லவா? மக்களிடம் காணப்படும் கவலை, உணர்ச்சியற்ற கொடுங்கோலாட்சியால் அல்லவா ஏற்படுகிறது? கவலைசாடிய மக்களும் வாழ்வைத் துன்பமயமானது என்று கொள்வது கிடையாது. இன்பமும் அன்பும் வாழ்க்கையிலிருந்து பிரிக்க முடியாதவை; மக்களிடமிருந்தும் அவை பிரிக்க முடியாதவை என்கிற உண்மையை அவர்களுடைய வெற்றி எடுத்துக்காட்டுகிறவரை அவர்கள் கடுமையாகப் போராடியே தீர்வார்கள்.

முரசடித்த தவளை

நிறையச் சாமான்களை ஏற்றிக்கொண்டு ஒரு வண்டி, சாலை நெடுகப் போய்க்கொண் டிருந்தது. அதை நிறுத்த வேண்டு மென்று ஆசைப்பட்டது ஒரு பாம்பு; இது ஒரு சாதாரண காரியமில்லை என்று கருதிய அந்தப் பாம்பு ஒரு தவளையை அணுகி, "பெரிய சண்டைஒன்று நிகழவிருக்கிறது. அதற்குப் போர் முரசு கொட்ட வேண்டும். அந்தக் காரியத்திற்கு உன்னைப் போன்ற புகழ்பெற்ற ஆசாமியின் உதவி எனக்குத் தேவைப்படுகிறது" என்று கூறிற்று.

இதைக் கேட்ட தவளைக்கு ஒரே மகிழ்ச்சியாகி விட்டது. சாமான்கள் ஏற்றிவந்த அந்த வண்டி கிட்ட நெருங்கவும், ஆன மட்டும் காற்றை உட்கொண்டு, உரத்திக் கத்த ஆரம்பித்தது தவளை.

தவளை கத்தினதால் ஊக்கமடைந்த அந்தப் பாம்பு கோபம்கொண்டு சாலையின் குறுக்கே படுத்துக்கொண்டு வண்டியைத் தடுத்து நிறுத்தமுற்பட்பது. ஆனால், துரதிர்ஷ்டவசமாக வண்டிச் சக்கரங்கள் பாம்பின் மீதேறி அதைக் கொன்றுவிட்டன. ஆனால், தவளைக்கோ பாம்புக்கு ஏற்பட்ட இந்தத் துர்க்கதி தெரியாததால் தன்னால் முடிந்தவரை உரத்த குரலில் தொடர்ந்து கத்திக்கொண்டே இருந்தது.

இந்தச் சமயத்தில் கூட்டமாகப் பறந்துவந்த பறவைகள் அங்கே இறங்கிச் அந்தப் பாம்பைத் தின்று, யுத்தகளத்தைச் சுத்தமாக்கின. அதன்பின்

னரும் விஷயம் தெரியாமல் தவளை விடாப்பிடியாகக் கத்திக்கொண்டே இருந்தது. இதைக் கேட்ட பறவைகளுக்குக் கோபம் உண்டாயிற்று: "இந்தத் தவளையையும் தின்று தீர்ப்போம். இது பெரிய நரகவேதனையை உண்டாக்கிக்கொண்டிருக்கிறது"



என்று கூறி, அதையும் உயிரோடு தின்று தீர்த்து விட்டன பறவைகள். அவை அந்தத் தவளையை யுத்தக் குற்றவாளியாகக் கருதவில்லை.

நேர்மைக்கு விரோதமாக ஆட்சிபுரியும் கொடுங்கோலரை ஒழித்துக்கட்டும்போது அவர்களுடன் சேர்ந்து ஒத்துப்பாடுகிற கவிதைகளையும், பேய்க் குரல்களையும் ஒழித்துக்கட்டுவது அவசியமாகும் என்ற இயற்கை நியதிப்படி அந்தப் பறவைகள் தவளையை ஒழித்துக்கட்டின.

கடலும் செம்படவப் பெண்ணும்

கடலுக்கு அருகாமையில் ஒரு இள நங்கை வாழ்ந்து வந்தாள்; கடலின்மீது அவளுக்கு அபார மோகம். நாள்தோறும் அதி காலையில் எழுந்து அதைப் பார்த்துக்கொண் டிருப்பதற்காக அவள் கடற்கரைக்குப் போவது வழக்கம். சில நாட்களில், கடல் மெல்ல அசைந்து கொடுத்து, கண் திறந்து, காலை யொளியைப் பார்த்துச் சிரித்து மகிழும். அந்த நேரத்திலேயே, அவளைக் கடல் கரையில் காணலாம். சிறு கட்டிலில் தூங்கி விழிக்கும் பல முள்ள பச்சிளம் குழந்தையின் புன்சிரிப்பைப் போன்று இருக்கிற அந்தக் கடலின் சிரிப்பைக் காண அந்தப் பெண் பெரிதும் விரும்பினாள். கடல் போல் பரவி வியாபித்துக் கிடக்கும் தன் பொன் னிறக் கதிர்களால் எக்களிப்பை அடையும் நஞ்செய் நிலத்தைப் போல அந்தக் கடலானது பொன்மய மாய் மின்னும் தன் சிற்றலைகளைக் கண்டு மாலையில் எக்களிப்பு அடைந்து, குடிகாரனைப்போலத் தனக் குத் தானே அது பாடத் தொடங்கிவிடும். அதன் இசையைக் கேட்பதில் அவளுக்குப் பிரியம் அதிகம். அந்த இசை அவளிடம் கனிவையும் இரக்கத்தையும் இன்பத்தையும் கவலையற்ற சுகத்தையும் தாராளத் தன்மையையும் எப்பொழுதும் அளித்து வந்தது. காலநிலை சரியாக இருக்கும் சமயங்களில் அந்தக் கடல், வனப்பும் ஒளியும் நிறைந்து காணப்படும். அதைக் கண்டவுடன் அவளுக்கு, தன் காதலனின் அழகு ஒழுகும் முகத்தில் காணப்படும் மகிழ்ச்சி

பொங்கிய சிரிப்பு அவள் நினைவுக்கு வரும். அதைக் காணக் காண அவளுடைய மகிழ்ச்சியும் அழகும் பெருகும்; புயலடிக்கும் காலங்களிலும் அக்கடலின் கொந்தளிப்பையும் குமுறலையும் கண்டு அவள் அஞ்சுவதே இடையாது. பெரும்பாலான பெண்கள் கொந்தளிக்கும் காதலை விரும்புவதைப்போல, அவளும் கொந்தளிக்கும் கடலைக் காணப் பெரிதும் ஆசை கொண்டாள்.

சுருங்கச் சொன்னால், எந்த நாளிலும் சரி, எந்த நேரத்திலும் சரி, கடல் அவளுக்குக் களிப்பைத் தந்தது.

தவிர, இன்னொரு காரணமும் உண்டு. அது யாருக்கும் இயல்பாக விளங்கக் கூடிய தொன்றாகும். அவள் அவ்வாறு கடலை விரும்பியதன் இரகசியத்தை மற்றவர்களைக் காட்டிலும் அந்தக் கடலே நன்கு அறியும்; இளம் செம்படவன் ஒருவனை அவள் காதலித்தாள். வலிமைபொருந்திய கைகளும் விசாலமான மார்பும் அந்தச் செம்படவனுக்கு இருந்தன; முகம் பழுப்பு நிறமானது; உதடுகள் சிவப்பானவை. அவன் உடலில் உப்புநீர் மணம் வீசும்; அவன் கிட்டவந்தாலே கடல் வாடை மூக்கைத் துளைக்கும்; அவனுடைய வாழ்க்கை கடலோடு பின்னிக் கிடந்தது. அதனாலே அவள் அவனைக் காதலித்தாள்.

அவள் நாள்தோறும் அவனைக் கடற்கரையில் சந்தித்துப் பேச வருவாள்; அவர்கள் இருவரும் கடலைப் புகழ்ந்து பேசும்பொழுது தாங்கள் சொந்தக் காதலையே அவர்கள் புகழ்ந்து பேசிக்கொள்வது போல் இருக்கும். "சிரித்துக்கொண்டும், பாடிக்கொண்டும், குட்டிக்கரணம் போட்டுக்கொண்டும்

விளையாடுகிற கடலைப் பார்; அது எவ்வளவு அழகாய் இருக்கிறது" என்று ஒருவருக்கு ஒருவர் நெஞ்சைவிட்டுப் பேசிக்கொள்வார்கள்.

சுருங்கச் சொன்னல், அவர்கள் ஒருவரை ஒருவர் எவ்வாறு காதலித்தார்களோ, அவ்வாறே கடலையும் அவர்கள் இருவரும் காதலித்தார்கள்.

இதனல் அந்த இள நங்கையும் மகிழ்ந்தாள்; செம்படவனும் மகிழ்ந்தான்; கடலும் மகிழ்ந்தது.

காரணம் உண்டோ இல்லையோ, சில சமயங்கள் இன்பத்தைத் தந்தவன் எவனே அவனே இன்பத்தைத் திருடுகிறவனும் ஆகிருன். நேர்மையான இந்தப் பெண்ணின் இன்பத்தைக் கண்டு எந்தக் கடல் பூரிப்பை அடைந்ததோ, எந்தக் கடல்மீது அந்தப் பெண் அன்புசெலுத்திளுளோ, அதே கடல்தான், விரைவில் அவளுடைய இன்பத்தைக் குலைப்பதற்கும் ஒரு காரணமா யிருந்தது.

ஒருநாள், தன்காதலனைச் சந்தித்து அளவளாவிய பின்னர், சந்தோஷமாகச் சிரித்தவண்ணமாய் கடலில் அவன் செல்லுவதைப் பார்த்துக்கொண்டே அந்தப் பெண் இருந்தாள். அந்தச் சமயத்தில் திடீரென்று பெரிய அலை ஒன்று கிளம்பி அவளுடைய காதலனை அப்படியே விழுங்கிவிட்டது.

அந்த நங்கை தனக்கு ஏற்பட்ட இவ்வளவு பெரிய நஷ்டத்தைக் கண்டு ஆருத் துயரத்தில் ஆழ்ந்தாள். அவளுக்கு இதுவரை இன்பமூட்டி வந்த கடல் அதற்கு மாருக இப்போது அவளைக் கவலையில் ஆழ்த்திவிட்டது, அது மட்டும் அல்லாமல் அந்தக் கடலானது அவளுடைய பார்வையில் தன் அழகு இழந்து, ஒளியிழந்து கவலைதரும் புதைகுழியாகவே மாறிவிட்டது.

ஆனால், ஒரு அதிசயம் என்னவென்றால்: அவள் நாள்தோறும் தொடர்ந்து கடலைக் காணச் சென்று வந்தாள். தனக்கு ஏற்பட்ட துக்கம் காரணமாக அவள் அந்தக் கடலைச் சபித்தாள்; திட்டினாள்; இருந்தும் கடலைவிட்டுப் பிரிந்திருக்க அவளால் முடியவில்லை. முன்னைப்போலவே கடலின்மீது தனக்கு விருப்பம் இருப்பதாக அவள் கூறினாள். உண்மையாகவே அவள் அடைந்த அந்தப் பெரிய நஷ்டத்தினால் அவளுக்குக் கடலின்மீதுள்ள பாசம் குறையவில்லை.

முடிவாக, கடலைப் பார்த்துக்கொண்டிருந்த அவள் "உன்னைப் பார்த்தால் அரக்கன்போல் இருக்கிறாய்; இருந்தாலும் நான் உன்னோடு சண்டைபோடப் போகிறேன். யார் ஜெயிக்கிறார்கள் என்று பார்ப்போம்" என்று சொல்லிவிட்டு, கடலில் குதித்தாள். அவள் முகம் பழுப்பேறி உடல் வலிமை பெறுகிறவரை கடலுக்குள் கிடந்தாள்.

வாலிபச் செம்படவர்கள் ஈடுபடுகிற வேலைகளில் அவளும் ஈடுபட்டு உப்பங் காற்றினால் எழுகின்ற அடங்காத அலைகளையும் அடக்கக் கற்றுக்கொண்டாள்; அப்போது அவள் அந்தக் கடலின்மீது முன்னையைக் காட்டிலும் அதிகமான காதல் கொண்டாள். இழந்த நண்பனை அந்த வாலிபச் செம்படவனை நினைத்தும் இதுவரை அவன்மீது கொள்ளாத அளவு பெருங் காதல் கொண்டாள்.

சிங்கமும் சூரிய அஸ்தமனமும்

ஒரு நாள் ஒரு பாலைவனத்தின் ஓரத்தில் சூரியன் மறைந்துகொண்டிருந்தான். திடீரென்று சூரியன் மறுபடியும் பாலைவனத்தைப் பார்த்து அதன் மீது தன் செங்கதிர்களைப் பரப்பி அந்தப் பாலைவனத்தை இரத்தக் கடலாக மாற்றினன். அமைதியாக அங்கு சுற்றித் திரிந்துகொண்டிருந்த சிங்கத்திற்கு இத்தகைய வனப்பு மீண்டும் தோன்றவா செய்யும் என்ற எண்ணம் உதித்தது; எனவே அதன்மீது சொல்லமுடியாத அளவு ஆசைகொண்டு அது சொன்னதாவது: "அதோ பிரகாசிக்கிறதே அந்தக் கோளமே என்னுடைய ராஜ்யத்தை ஒளிமயமாக்குகிறது; இந்தப் பாலைவன மன்னனுகிய நான் அதை உடனே பற்றி இழுத்துக்கொண்டு வராவிட்டால் அது சிறிது நேரத்தில் மறைந்துவிடக் கூடும்."

இந்த எண்ணமே அதற்கு எமனுக முடிந்தது.

சூரியனைப் பிடித்துவைத்துக்கொள்ள வேண்டும் என்ற ஆவேசம் சிங்கத்துக்கு அதிகரித்தது; அது உடனே காற்றெனக் கடுவிசையுடன் மேல் திசை நோக்கிச் சென்றது. அந்த வேகத்தில் தரையிலிருந்த செம்மண் புழுதி பெரிய மேகம்போல எங்கும் பரவி மூடிற்று. சிங்கம் மேற்கே செல்லச் செல்லச் சூரியனும் மேற்கிலே சென்ருன். பாலைவனம் இரத்தச் சிவப்பிலிருந்து மங்கலான சாம்பல் நிறத்திற்கு மாறியது. இந்தச் சமயத்தில் சிங்கம் ஒரு ஏரியின் கரையை அடைந்தது. பாலைவனத்

தின் முத்துக்கள் என்று கூறப்படுகிற ஏரிகளில் அதுவும் ஒன்று. ஏனென்றால் அதனுடைய நீர் அவ்வளவு தெளிவாகவும் கவர்ச்சியாகவும் இருந்தது. ரோஜா நிறம் பொருந்திய ஒரு மேகம் அடிவானத்திலிருந்து தன் பொன்னிற நிழலை அந்த நீல நிற ஏரியின் ஆழத்தில் வீசியது. அதைக் கண்டு சிங்கம் சற்று தயங்கி நின்று ஆவலுடன் பார்த்து "ஆ நான் விரும்பிவந்த பொருள் இதோ இருக்கிறது" என்று கூறி ஏரிக்குள் குதித்துத் தன் உயிரையே இழந்தது. சாகும்போது, "மாயப் பொருளை நாடி மாய்வதிலும் வேறு சிறந்த வகையான சாவு என்ன இருக்கிறது?" என்று தனக்குத் தானே அது பெருமைப்பட்டுக்கொண்டது.

ஆதிக்கம் செலுத்திய வர்க்கத்தினர், பின்னர் தங்கள் செல்வாக்கு அழிந்து முடிவை நெருங்குகிற காலத்தில், அவர்களில் ஒரு சிலர் புதிதாகக் கிளம்பி தாங்கள்தான் ஒழிந்த ஆதிக்க நாட்களை மீட்டிக்கொண்டு வரக்கூடிய சூரர்கள் என்று தங்களைத் தாங்களே ஏமாற்றிக்கொள்வார்கள். அப்படிப்பட்டவர்களில் சிலர், இருந்த இடம் தெரியாமல் தங்களது முயற்சியின் நடுவிலேயே போகிற போக்கில் அழிந்து போவார்கள். மற்றும் சிலர், பெரிய குறிக்கோளுக்காக உயிரைக் கொடுப்பவர்கள் என்று தங்களைக் கூறிக்கொள்வார்கள். அவர்களது குறிக்கோளோ, அவர்களாகவே கற்பனை செய்துகொண்ட அழகியதும், ஆனல் நிலையற்றதுமான கற்பனையே யாகும்.

சேற்றில் விழுந்த நரி

நாட்டுப் புறத்தில் அலேந்துகொண் டிருந்த நரி ஒன்று சேறும் சகதியும் நிறைந்த ஒரு பெரிய குட்டைக்கு வந்து சேர்ந்தது. அந்தக் குட்டையை ஒரே தாவில் தாவிவிடக் கூடிய திறமை தனக்கு இருப்பதாக அது நினைத்தது. இருந்தாலும் தனது திறமையைச் சோதிக்க விரும்பி அவ்வாறே தாவும் பொழுது, எதிர்பார்த்த அளவில் பாதிப் பங்கு திறமைதான் அதற்கு இருந்தது; ஆகையால், அது அந்தக் குட்டையின் நட்ட நடுவே ஆழத்தில் விழுந்து விட்டது. வெளியேறுவதற்கு எவ்வளவோ முயன்றும் அதனுல் முடியவில்லே. உடனே அது தன்னுல் முடிந்தவரை கதறிப் பார்த்தது.

அங்கிருக்கும் மலேகளும் காடுகளும், தன் கதறலேக் கேட்டு அஞ்சி நடுங்கி, தனக்கு உதவி செய்ய வரக் கூடும் என்று அந்த நரி நினைத்தது. இந்த எண்ணம் ஈடேருமல், கிடந்த இடத்திலேயே அது கிடக்க நேர்ந்தது. மலேகளும் காடுகளும் பேசாமல் இருந்துகொண்டு அதைப் பார்த்து ஏளனமாகச் சிரித்தன. இந்தத் தோல்வியினுல் தனது கதறலே அந்த நரி சிறிது குறைத்துக்கொண்டு தனக்குத் தானே முதலில்சமாதானம் தேட முயன்றது: "நான் போடுகிற சப்தத்தை வேண்டுமானுலும் குறைத்துக்கொள்கிறேன்; அதற்குப்பின் நீங்கள் எனக்குச் செய்யப் போவதுதான் என்ன?" என்று கேட்டது. அதற்கும் பதிலே இல்லே. இறுதியில் முயற்சியைக் கைவிட்டுவிட்டுத் தனக்குத் தானே "இப்படி

நான் சேற்றில் சிக்கிக்கொண்டது எனக்கு ஒரு பெரியதோல்விதான்; இருந்தாலும் பாதகமில்லை" என்று அந்த நரி கூறிக்கொண்டது.

இந்த நரியைப் போன்ற ஒருவனை நீ நண்பனுகக் கொள்ளக் கூடாது. ஆனால் அவனுடைய போக்கைச் சிறிது சிந்தித்துப் பார்க்க வேண்டும். தோல்வி ஏற்பட ஏற்பட, அவனுடைய கூக்குரலும் பெரிதாகும்; ஆனால் விரைவில் கூக்குரலை விட்டு விட்டு, தனக்குத் தானே அவன் புலம்பிக்கொண்டு கிடப்பான்.

காடும் போர்ப் பன்றியும்

தன்னுடைய வலிமையில் அபார நம்பிக்கை கொண்டிருந்த காட்டுப் பன்றி ஒன்று யாவற்றையும் வெல்ல வேண்டும் என்று நினைத்தது. ஆகையினால் போர்புரியும் எண்ணத்துடன் காட்டில் நாலா பக்கமும் தவ்விக்கொண்டு திரிந்து வந்தது. ஆனால் அதன் அதிர்ஷ்டமோ படுமோசமாய் இருந்தது. முதலில் ஒரு மரத்தைத் தாக்கியதில் அதன் தோல் கிழிந்துவிட்டது. மற்றொரு மரத்தைத் தாக்கியதில் அதன் ஒரு கொம்பு ஒடிந்துவிட்டது. இந்த நிலைமையில் உடல் வலுவுள்ள ஒருவனால் பொறுமையை இழக்காமல் இருக்கவா முடியும்? உடனே அந்தப் பன்றி சினமூண்டு அந்தக் காடு முழுவதையும் தனது எதிரியாக நினைத்தது; தனித் தனியாக ஒவ்வொரு மரத்தையும் முழு பலத்தோடு தாக்கி வேகமாக முட்டியது, கடித்தது, உதைத்தது. உண்மையான யுத்தம் நடப்பதுபோல அந்தப் பன்றி நினைத்துக்கொண்டதால், அதன் கண்களினின்று நெருப்புப் பொறி பறந்தது. அது போட்ட உறுமலால் அங்கிருந்த குன்றுகள் யாவும் அதிர்ந்தன. பன்றியோ மேனி முழுவதும் காயமுற்று முழுத் தோல்வியடைந்து மனவேதனைப் பட்டது; இருந்தாலும் தனது போரை அந்த நிலைமையிலும் விட்டுக்கொடுக்க அதன் மனம் இடம் தரவில்லை; தனது கோபம் எல்லாம் தீர ஒரு மரத்தினுடைய உச்சியையாவது ஒடித்துச் சிதறடிக்க வேண்டுமென்ற எண்ணங்கொண்டதாய் ஒரே

பாய்ச்சலாக மேலே பாய்ந்தது. ஆனால், துரதிஷ்ட வசமாக, பக்கத்தி லிருந்த மரத்தின் கிளை ஒன்று அதன் அடிவயிற்றில் குத்தியது. கீழே இறங்க முடியாமல் அந்தப் பன்றி தொங்கிக்கொண் டிருந்த காட்சி, அதன் உண்மை நிலையை, தெருவிளக்குப் போல, உலகத்துக்கே எடுத்துக்காட்டுவதாய் இருந்தது.

அந்த வம்புக்காரப் பன்றி கீழே இறங்க முடியாமல் இறந்துபோய்விட்டது.

தன்னை ஒரு காலத்தில் படிப்பாளியாக எண்ணிக்கொண்டிருந்த ஒரு முயல் அவ்வழியே போகும் போது, அந்தப் பன்றியைப் பார்க்க நேர்ந்தது.

"எந்த இடத்திற்குச் சென்றாலும் இந்தப் பன்றி தனது வம்புத்தனத்தால் பகையையே சம்பாதித்துக்கொண்டது. அதனால் தோல்வி அடைந்து அதன் உடம்பு மரத்தின் உச்சியில் தொங்கி, உயிரற்றுக்காய்ந்தே போய்விட்டது" என்று கூறியது.

அரசனாக விரும்பிய வாத்துக் குஞ்சு


ஒரு வாத்துக் குஞ்சை அதனுடைய சகோதரர்கள் சண்டைபோட்டு வெளியே துரத்திவிட்டன. அது ஒரு புல்தரைமீது அமர்ந்து மிகவும் மனம் வருந்தி அழுதுகொண் டிருந்தது.

அந்தச் சமயம் அந்த வழியே வந்த கீரி ஒன்று அதனிடம் சென்று, "என்ன? இளைஞனே! ஏன் வருத்தப்பட்டு அழுதுகொண் டிருக்கிறாய்? அரசகுமாரனுக்குரிய லக்ஷணங்கள் அனைத்தும் உன்னிடம் பொருந்தி யிருக்கின்றன. உன்னிடமிருந்து உனது சிம்மாசனத்தைப் பறிப்பதற்காக யாரேனும் உன்னைத் துரத்தியடித்துவிட்டார்களா? என்ன?" என்று கேட்டது.

அதன் வார்த்தைகளில் நிரம்ப உண்மை இருக்கிறது என்று நினைத்துக்கொண்ட அந்த வாத்துக் குஞ்சு, கீரியைப் பார்த்து "ஐயா! நீங்கள் சொல்லுவது உண்மை. நான்தான் உண்மையான இளவரசன். அவர்கள் உரிமையற்ற போலிகள்; பொதுமக்களின் கிளர்ச்சியைத் தங்களுக்குச் சாதகமாக பயன்படுத்திக்கொண்டார்கள்" என்று கூறியது.

"நான் நினைத்தது சரியாக இருக்கிறது. ஆகவே நீ உன் சொந்த நாட்டிலிருந்து விரட்டப் பட்டு ஓடிவந்த இளவரசன். இது மிக மிக அக்கிரமம்; பரவாயில்லை. நீ எனக்கு முன்னே சென்று வழிகாட்டு. நான் வந்து கலகத்தை அடக்கி, சட்டப்படி உன்னையே அரசனாக்கிவிடுகிறேன்" என்று கூறியது கீரி.

தான் உண்மையில் ஒரு இளவரசனாய் இருந்தால் எவ்வளவு மகிழ்ச்சி யடையுமோ அவ்வளவு மகிழ்ச்சி யடைந்தது அந்த வாத்துக் குஞ்சு; அது சிறு குஞ்சாக இருந்தபடியால் அதனால் வேகமாக நடக்க முடியவில்லை. ஆகவே, அந்தக் கீரியின் முன்னால் அசைந்தாடி, கம்பீரமாக அது நடந்துபோய்க் கொண்டிருந்தது. தன் சகோதரர்களை அடக்கி ஒடுக்கிவிட்டு, சிம்மாசனம் ஏறுவதற்காகக் கீரியை அழைத்துக்கொண்டு சென்றது.



ஆனால், கொஞ்ச தூரம்தான் அது சென்றிருக்கும். அதற்குள் அந்தக் கிரி வாத்துக் குஞ்சின்மேல் பாய்ந்து அதைக் கவ்விக்கொண்டுவிட்டது.

வாத்துக் குஞ்சோ "ஏ. ஏகாதிபத்தியவாதியான ராஜ கிரியே!" என்று சொல்லுவதுபோல வீச்சுவீச்சென்று பரிதாபமாகக் கத்தியது.

கிரி அதைப் பார்த்து "நீ வேடிக்கையான வாத்துக் குஞ்சாய் இருக்கிறாய். நான் இவ்வளவு நேரமும் உன்னை வைத்து விளையாடிக்கொண்டல்லவா இருந்தேன். இதுவரையும் நான் யாரென்

பது உனக்குத் தெரியாமலா போயிற்று" என்று சொல்லிக்கொண்டே அந்த வாத்துக் குஞ்சைக் கீரியானது மென்று தின்றது. அதனுல் கீரி சொன்ன சொற்கள் தெளிவாக அதன் காதில் விழ வில்லை.

மரத்தை நெறிக்க முயன்ற பாம்பு

ஒரு பாம்பு ஒரு மரத்தைக் கொல்ல நினைத்தது. அதைப்பற்றித் தீர்க்கமாக ஆலோசனை செய்தபிறகு எதிரியினால் தாக்குப்பிடிக்க முடியாத போர்த் தந்திர முறைகளைக் கையாளத் தீர்மானித்தது. இந்த முடிவுக்கு வருவதற்கு அது கற்ற கல்வி அதற்கு மிகுந்த உதவியாக இருந்தது. கொடிகளால் சுற்றப்பட்டுச் சில மரங்கள் வலிமை இழந்த நிலையிலிருப்பதை முன்கூட்டியே அந்தப் பாம்பு தெரிந்து வைத்துக்கொண் டிருந்தது. "எந்தக் கொடியைக் காட்டிலும் பருமனாகவும், பலமாகவும் இருப்பவன் நான். ஆகையால் நான் மட்டுமே மரத்தைச் சுற்றிக்கொண்டு இறுக்கினால் ஒரு வேளை மூச்சுத் திணறி, மரத்தின் உயிர் உடனே போகாவிட்டாலும், மெதுவாக, வாடி வதங்கிச் சோர்ந்து அதன் உயிர் போய்விடும்" என்று தனக்குள் அது கூறிக்கொண்டது.

உடனே அந்தப் பாம்பு மரத்திலேறி அடிமரத்தைத் தன் உடலால் சுற்றி வளைத்து இறுக்கியது. விரைவில் மரத்தின் உயிரைப் போக்கடிக்கலாமென்ற எண்ணத்தில் மேலும் மேலும் வலுவாக அந்தமரத்தைச் சுற்றி அது இறுக்கியது. பின்னர் அந்த மரத்தைக் கவனித்தபோது முன்போலவே அந்த மரம் அசையாமல் அப்படியே இருந்தது. ஆகவே பாம்பானது அதிகக் கோபமடைந்து அந்த மரத்தைமேலும் மேலும் தன் உடலால் வளைத்து இறுக்கியது. மறுபடியும் மரத்தைப் பார்த்த

பொழுது அதனிடத்தில் எவ்வித மாறுதலும் தென்படக் காணோம்.

பாம்பிற்கோ அபாரமான கோபம் வந்துவிட்டது. அது அந்த மரத்தைப் பார்த்து, "நீ என்ன இப்படியிருந்தே சமாளிக்கலாமென்று பார்க்கிருய்? சிறிதும் விட்டுக்கொடுக்காமலிருந்தால் ஏதாவது வழி பிறக்கும் என்று நினைக்கிருயா?" என்று கூறி அதைச் சபித்தது.

எப்படியும் முன்வைத்த காலைப் பின்வாங்காமல் கடைசிவரை தன் கை வரிசையைக் காட்டிவிடுவது என்று எண்ணியது அந்தப் பாம்பு. தன் பிடிப்பைத் தளர்த்தாமல் மரத்தை நெறித்துக் கொல்வது என்ற தீர்மானத்திலிருந்தது. இந்த நிலை நெடிது நேரம் நீடிக்கவில்லை. மரத்தை வளைத்து ஒட்டிக்கொண்டிருப்பதைக் காட்டிலும் எலும்பொடியும்படியாக முழு மூச்சோடு முயன்று பார்ப்போம் என்று நினைத்ததோ என்னவோ? அல்லது மரந்தான் பாம்பை முறிப்பதற்காகத் தனது சுற்றுப் பருமனை திடீரென்று பெரிதாக்கிக்கொண்டதோ என்னவோ? எது எப்படியிருந்தபோதிலும், அந்தப் பாம்பு வெகு விரைவில் இற்றுப்போன கயிறு போல, சடசட வென்று பல துண்டுகளாக ஒடிந்து எலும்பு முறிந்த நிலையில் தரையில் விழுந்தது.

குற்றமுள்ள நெஞ்சு

உறைபனி அதிகமாகப் பெய்து ஒரு மலை முழுவதையும் மூடி மறைத்துவிட்டது. அதனல் அந்தக் குன்றிலே வாழ்ந்து வந்த ஒரு ஓநாய்க்குத் தின்பதற்கு ஒன்றும் கிடைக்கவில்லை. பட்டினி கிடக்கவும் அதற்கு மனமில்லை; இதற்கு முன்பே உழவர்களின் கோழிகளையும் குஞ்சுகளையும் பிடிக்கப்போய் அவர்களிடம் பட்ட அடியையும் துன்ப அனுபவத்தையும் அது மறந்துவிடவில்லை. இருந்தாலும் மலையிலிருந்து கீழே இறங்கி, கிராமத்திற்கு மீண்டும் சென்று கோழி பிடிப்பதற்கு அது துணிவுகொண்டது. அப்படியே மலையிலிருந்து இறங்கி வெகு துரிதமாகத் தன் காரியத்தை முடித்துக்கொண்டதால் இந்தத் தடவை அடிபடாமல் தப்பித்துக்கொண்டது; ஆகவே தெம்புடன் சந்தோஷமாக அது திரும்பி வந்தது. "பயப்படுவதற்கு ஒன்றுமில்லை! யாரும் துரத்த மாட்டார்கள்! என்னைத் துணிந்து துரத்த யாருக்கு இனித் தைரியம் வரும்? ஆம்; ஓநாய் ஆகிய நான்தான் பட்டப்பகலில் திருடினேன், நிச்சயமாக நான்தான்! இதுதான் என் வாழ்க்கை யாயிற்றே" என்று தனக்குள் சொல்லிக்கொண்டது. தான் நேர்மையாக நடந்து கொள்வதால் தைரியமாக இருக்கலாம் என்பது அதன் நினைவு. ஆகவே, கோழியைத் தன் வாயில் கவ்விக்கொண்டு மலைக்கே சென்று அங்கே அதைப் பிரியமாகத் தின்றது ஓநாய்.

திடீரென்று ஏதோ ஒரு அச்சம் அதற்கு உண்டாயிற்று. தான் வந்த அடிச்சுவட்டையும் வழி

நெடுக ஒழுகி இருந்தகோழியின் இரத்தத்தையும் யாராவது கண்டுபிடித்துவிட்டால் அதனுல் தனக்கு அபாயமும் தொல்லேயும் ஏற்படக் கூடு மென்று அதனுடைய குற்றமுள்ள நெஞ்சம் குறுகுறுத்தது.

"நம்முடைய குற்றத்தை வெளிப்படுத்துகிற ஆதாரங்கள் தெளிவாக இருக்கின்றனவே. ஒரு வேளை உடைமைக்காரர்கள் வந்துவிட்டால் நான் எப்படித் தர்ம நியாயம் பேசித் தப்பிக்க முடியும்? அப்படியே அவர்கள் வந்துவிடுவார்களாஞல் 'எனக்கொன்றும் தெரியாது' என்று மறுப்பது தான் வழி" என்று தனக்குள் தீர்மானித்துக் கொண்டது.

உடனே கீழேயுள்ள பள்ளத்தாக்கை நோக்கிய வண்ணமாய் "இங்கே கவனியுங்கள். இது உண்மை யல்ல. சிலர் என்னுடைய நல்ல பெயரைக் கெடுக்க வேண்டு மென்றே வீண் புரளியைப் பரப்பி இருக் கிருர்கள்" என்று கூச்சலிட்டது.

உடனே தன்னுடைய வாயினுல் தனது அடிச் சுவட்டையும் சிந்திக் கிடந்த இரத்தத்தையும் துடைத்தது. அவ்வாறு துடைக்கத் துடைக்க அதிகமான இரத்தம் கீழே வழிந்தது. காரணம் என்ன வென்ருல்: கோழியைக் கிழித்துத் தின்ற அதன் தவடைகளில் இரத்தம் இருந்தது. அதை நக்கிச் சுத்தம் செய்வதற்கு ஓநாய்க்கு நேரமில்லே.

எக்காளம் ஊதிய நரி

நரியின் யோசனைகள் பெரும்பாலும் நிரம்ப விநோதமாய் இருக்கும். அதனுடைய செயல்களோ ஆச்சரியத்தையும் அதிர்ச்சியையும் விளைவிக்கக் கூடியதாக இருக்கும். ஒரு காலத்தில் ஒரு நரி இருந்தது; அது தன்னுடைய வாயில் ஒரு எக்காளத்தையும், வாலில் ஒரு தீப்பந்தத்தையும் பலமாகக் கட்டிக்கொண்டு இங்கு மங்கும் சவுடாலாகப் போய்க்கொண் டிருந்தது. எக்காளத்தின் வாயிலாக "யாரும் தீவைக்காமல் பாதுகாத்துக் கொள்ளுங்கள்; கலகக்காரர்கள் தீவைத்துக் கொள்ளையடிக்காதபடி கவனித்துக்கொள்ளுங்கள்" என்று கத்தியது. இதற்கிடையில் அதன் வாலிலிருந்த தீப்பந்தம் வழி நெடுக யாவற்றையும் கொளுத்திக் கொண்டு சென்றது.

இந்தத் துணிச்சலான காரியத்தைப் பார்ப்பதற்காகப் பக்கத்திலும் தூரத்திலும் உள்ள கிராமத்து ஜனங்கள் கூடிவிட்டார்கள். அதைக் கண்டு திகிலடைந்து மலைத்துப் போனார்கள்; தனது காரியத்தில் வெற்றி பெற்றதாக மகிழ்ச்சி யடைந்த அந்த நரி, அங்கு கூடியிருந்த பொதுஜனங்களுக்கு தனது அருஞ் செயலை விளக்க முயன்றது. "சகோதரர்களே! கேளுங்கள். எவன் 'தீப்பிடிக்கிறது! தீப்பிடிக்கிறது!' என்று கத்துகிறானே அவனே மற்றொரு பக்கம் தீவைக்கிறவனாகவும் இருப்பான். இதுதான் நான் கண்டுபிடித்துள்ள புது மாதிரியான திருவிளையாடல்" என்றது.

குழி முயல்களின் அறிவீனம்

சில குழிமுயல்கள் ஒரு குன்றின்மீது வசித்து வந்தன. ஓநாய்களின் அரசன் மலையுச்சியிலிருந்து தங்களைப் பார்க்க வருவதாகச் செய்தி கேட்டு அந்த முயல்களுக்கு அளவுகடந்த சந்தோஷம் உண்டாயிற்று. சந்தோஷ மிகுதியால் அவை குதித்துக் கூத்தாட ஆரம்பித்தன. ஓநாய் அரசனுடைய வருகையை, தங்களுக்குக் கிடைத்த பெரிய கௌரவமாக அவை மதித்தன.

தங்களது குழிகளினின்று வெளியே வந்து இந்தக் குதூகலச் செய்தியைப்பற்றித் தங்களுக்குள்ளே அவை கலந்து பேசிக்கொண்டன. இதற்கு முன் கண்டிராதபடி வெகுவிமரிசையாக அந்த அரசனுக்கு நல்வரவு அளிக்க ஏற்பாடுகள் செய்தன. "இது சரித்திரத்தில் இடம் பெறக் கூடிய சம்பவம் என்றும் இச் சம்பவம் நமது பரம்பரைக்கே அளவு கடந்த இன்பத்தை அளிப்பதாகும் என்றும்" தங்களுக்குள் அவை கூறிக்கொண்டன.

குறித்தபடி ஓநாய் அரசனும் வந்தான். முயல்களோ சாலையின் இரு மருங்கிலும், கிழவர்களைத் தாங்கிக்கொண்டும் சின்னஞ் சிறுர்களைத் தூக்கிக்கொண்டும் வரிசையாக நின்று அரசனை வாழ்த்தி ஆனந்தக் கண்ணீர் சொரிந்தன. அவர்கள் அளித்த வரவேற்பை அங்கீகரிப்பதற்கு அடையாளமாகத் தலையசைத்தான் அந்த மன்னன்; அவர்களுக்கு நல் வாழ்வு அளிப்பதாகவும் தெரிவித்தான்.

வரவேற்பு வைபவங்களெல்லாம் முடிந்தன. அந்தப் பகுதி மிக நன்ருய் இருப்பதனுலேயே

அடிக்கடி வந்து போய் அங்கே தங்கும் பொருட்டு, ஒரு சிறந்த விடுதியைக் கட்ட விரும்புவதாக மன்னன் கூறினான். உடனே குழிமுயல்கள் தங்களது வீடுகளை இடித்துத் தள்ளி அந்தச் சாமான்களைக் கொண்டே மன்னனுக்குத் தாங்களாகவே எவ்வித ஊதியமும் இன்றி உழைத்து, ஒரு வீட்டைக் கட்டித் தந்தன; ஓநாய் அரசன் வேறு மாற்று உடைகளும் படுக்கையும் கொண்டு வராததால் குழிமுயல்களே அவனுக்கு மெல்லிய உரோமத் தோல்களை ஏராளமாகக் கொடுத்து அவற்றைத் தற்காலிகமாக அணிந்துகொள்ளும்படி கெஞ்சிக் கேட்டன. அது மட்டும் அல்ல; அரசன் தனக்கு வேண்டிய உணவுப் பொருள்களைக் கொண்டுவர வில்லை; அதிர்ஷ்ட வசமாக அவன் தங்கிய இடத்திலேயே வருஷ முழுவதும் ஏராளமான முயல் இறைச்சி கிடைத்தது; அதற்காகப் பணச் செலவு செய்ய வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. தூரத்திலிருந்து தருவிக்க வேண்டிய அவசியமும் ஏற்படவில்லை.

நிலைமைகள் விரைவாக மாறின. கம்பீரமான முறையில் பெருமைப்பட்டு வரவேற்ற அந்தக் குழிமுயல்களே பரிதவிக்கத்தக்க முறையில் ஏங்கிக் கதறின. பெருகி வளர வேண்டியதற்கு மாறாக குழிமுயலின் குலம் அருகிக்கொண்டே வந்தது. தம் குல முழுவதுமே அழிந்துவிடுமோ என்ற அச்சம் முயல்களின் மனத்தை வாட்டியது. முயல் கூட்டத்தின் தகுதிவாய்ந்த பெரியவர்களும் தங்கள் உயிரைப்பலிகொடுக்காமல் தப்பிக்க முடியவில்லை. இவர்களோ சாதாரணமான அறிவாளிகள் இல்லை. இப்போதோ பெரிதும் மனம் நொந்து, நீண்ட காது

களைச் சொறிந்துகொண்டு "இவ்வளவு அறிவாளி களான நாம் முதலில் ஏன் கவனத்தோடு சிந்திக் கத் தவறிவிட்டோம்?" என்று வருந்தின; தகைமை சான்ற இந்த முயல்களின் நிலைமைக்கு உண்மை யாகவே அனுதாபப்படுகிறேன்.

ஒரு முக்கியமான எளிய பழைய உண் மையை இந்த முயல்மேதாவிகள் புரிந்துகொள்ளத் தவறிவிட்டார்கள் :

கொடுங்கோலர்களும் சரி, படையெடுப்பாளர் களும் சரி, அவர்கள் நமக்குச் செய்கிற மரியா தைகள் எல்லாம் பொதுஜனங்களுக்கு வேதனை யையும் துன்பத்தையும்தான் தரும்.



ஒரு நரியும் கோழிக் கறியும்

ஒரு நரி ஒரு கோழியைப் பிடித்து தன் வளைக்குச்சென்று அதன் இறக்கையெல்லாம் பிய்த்துப் பறித்தது. அதன் பிறகு அதைத் தின்னாமல் "இந்தக் கறியை நல்ல நாளுக்காக வைத்திருப்பேன். இப்போது இதை தின்னாமல் படுத்துறங்குவது தான் நல்லது" என்று கூறி, அதைத் தலையணையாக வைத்துக்கொண்டு படுத்துக்கொண்டது.



ஆனால், எவ்வளவுதான் முயன்றாலும் அதனால் கண் உறங்க முடியவில்லை. உடனே எழுந்து உட்கார்ந்து "இந்தத் தலையணை நிரம்பவும் மெதுவாக இருக்கிறது. அதனால்தான் என்னால் உறங்க முடியவில்லை. இதனுடைய கொழுப்பில் பத்தில் ஏழு பங்கும் சதையில் பத்தில் மூன்று பங்கும் தின்றுவிட்டால் சரியாய்ப் போய்விடும்" என்று கூறி முன்னும் பின்னுமாகக் கடித்துத் தின்று

விட்டுப் படுத்தது. பிறகும் அதற்கு உறக்கம் வரவில்லை. இப்பொழுது அந்த நரிக்குத் தலையணை கரடுமுரடாக இருப்பதுபோலத் தென்பட்டது. மறுபடியும் எழுந்து உட்கார்ந்துகொண்டு, "நான் முந்தி அதிகமாகக் கடித்துத் தின்றுவிட்டேன். இப்பொழுது அதைச் சரிப்படுத்திவிட வேண்டும்" என்று கூறிக்கொண்டு சதையில் பத்திலே ஏழு பங்கையும், கொழுப்பில் பத்திலே மூன்று பங்கையும் தின்றுவிட்டுப் படுத்தது.

அப்போதும் அதற்கு உறக்கம் வரவில்லை. பிறகு, மூன்றாவது முறையாக எழுந்து "இன்னும் உறக்கம் வரவில்லையே. முன்பெல்லாம் தலையணை இல்லாதபோது விடியும் மட்டும் நன்றாக அல்லவா தூங்கியிருக்கிறேன்" என்று கூறி, மிச்சம் சொச்சம் இருந்ததையும் தின்றுவிட்டு வயிற்றைத் தடவிக்கொண்டுபடுத்ததோ இல்லையோ, நன்றாக அது உறங்கிவிட்டது. விடிந்ததே அதற்குத் தெரியவில்லை.



நரியும் நண்டுகளும்

ஒரு நரி நிறைய நண்டுகளைப் பிடித்துப்போய் ஓர் இடத்திலே சேகரித்து வைத்தது. அவற்றைப் பார்த்து "இவை எல்லாம் நேச நாடுகள். சொந்த விருப்பத்தின் பேரில் என்னுடன் நேசம் பூண்டிருக்கின்றன. அவை எத்தனை இருக்கின்றன என்று எண்ணிப் பார்க்கிறேன்" என்றது.

சுட்டிக்காட்டிப் பாடிக்கொண்டே தன் விரலால் தொட்டு எண்ணியது. 'ஒன்று, இரண்டு, மூன்று' என்று ஒன்பதுவரை எண்ணி "ஆக மொத்தம் ஒன்பது நண்டுகள் இருக்கின்றன" என்று கூறிற்று.

இவ்வாறு எண்ணி முடிப்பதற்குள் சில நண்டுகள் வேகமாகக் குடுகுடு என ஓடி மறைந்துவிட்டன.

அது கண்ட நரி திரும்பவும் சந்தேகப்பட்டு "ஒன்று, இரண்டு, மூன்று" என்று எண்ணிய போது ஏழு நண்டுகள்தான் இருப்பதைக் கண்டு "என்ன ஏழு நண்டுகள்தானா?" என்றது.

திகிலடைந்து மூன்ருவது முறையாக எண்ணியது. பிறகு நான்காவது முறையாகவும் ஐந்தாவது முறையாகவும் எண்ணியபோது ஒரே ஒரு நண்டு தான் எஞ்சி இருந்தது.

நரிக்கோ பயித்தியம் பிடித்ததுபோல் ஆகிவிட்டது. எஞ்சிய அந்த ஒரு நண்டைத் தன் பாதங்களுக்கிடையில் பிடித்துக்கொண்டு "இனிமேல் எது எக்கேடு கெட்டாலும் எஞ்சிய இந்த நண்டை நான் விடவே போவது இல்லை" என்று சொல்லிக் கொண்டே அவசரம் அவசரமாக வாய்க்குள் போட்டுக்கொண்டது.

நரியும் ஓநாயும்

ஒரு நாள் நரி ஒன்று ஒரு வெள்ளாட்டு மந்தைக்குள் திடீரென்று பாய்ந்து ஒரு குட்டியைத் தூக்கிக்கொண்டு ஓடியது. பயத்தினுல் பதறின வெள்ளாடுகள் அதை ஓநாய் என்று தவருக நினைத்துக் கொண்டு "ஓநாய்க் கொள்ளைக்காரன்; எங்களைத் தின்ன வந்துவிட்டான் ; எங்கள்மீது மீண்டும் படையெடுத்துவிட்டான்" என்று அலறின.

பின்பு ஓநாயைச் சந்தித்த நரியோ அதை நோக்கி "வெள்ளாடுகள் கொஞ்சமும் காரணமில்லாமல் மறுபடியும் உன் பெயரையும் புகழையும் கெடுக்கப் பார்க்கின்றனவே" என்று சொல்லியது.

அது கேட்ட ஓநாய் "அப்படி யல்ல. அதற்கொரு காரண மிருக்கிறது. அவைகளுக்கு உன்னைக் காட்டிலும் என்னைத்தான் நன்ருகத் தெரியும். ஆகவே, அடாபிடித்தனமாய் வலிய வம்புக்குச் செல்பவனைப்பற்றி யாராவது பேச நேர்ந்தால் என் பெயர்தான் முதலில் நிச்சயமாக அடிபடும்" என்று பதில் சொல்லிற்று.



பாம்பும் தேனீக்களும்

ஒரு மரத்தின்மீது கூட்டமாகக் கூடுகட்டிக் கொண்டு தேனீக்கள் வசித்தன. மரக் கிளைகளின் ஊடே தேனீக்கள் இரைச்சலிட்டுப் பறந்துகொண்டிருந்ததால் அந்தப் பகுதியில் அமைதிக்குப் பங்கம் ஏற்பட்டு, ஒரே சத்தமும் சந்தடியுமாக இருந்தது. அந்தப் பக்கத்தை மேற்பார்வையிட வந்த ஒரு பாம்பு இதைப் பார்த்து வெறுப்படைந்தது.

"முதலாவதாக, இது மிகவும் முட்டாள்தனமான காரியம். அறிவாளியான ராஜதந்திரி ஒருவர் கூறியிருப்பதுபோல, குழப்பமுள்ள நாடுகளில் எப்பொழுதும் அமைதி நிலவாது. குழப்பத்திற்குக் காரணம் வெளிநாட்டாரின் தலையீட்டினலோ அல்லது உள்நாட்டுக் கலகத்தினலோ இருக்கலாம். அல்லது ஒரு சிறு சச்சரவினலாகவும் இருக்கலாம். ஆனல் இப்படி யெல்லாம் செய்வது மிகவும் முட்டாள்தனமான காரியம்" என்று அந்தப் பாம்பு கூறிற்று.

மேலும் தொடர்ந்து அது கூறியதாவது: "இரண்டாவதாக, இந்த மாதிரி எல்லோரும் ஒன்று கூடி ஒரு காரியத்தில் முனைந்து நிற்பது தரக்குறைவான செயல் ஆகும். நீங்கள் முறை பிசகி நடக்கிறீர்கள்; இங்கு ஒரு ஒழுங்கு இல்லாமல் இருந்து வருகிறது. நாட்டில் உள்ளவர் எல்லோருமே கலகக்காரர்களாகிவிட்டார்கள். நாட்டு மக்களின் சார்பில் பிரதிநிதியாக இருக்கக்கூடியவன் எவனை

யும் காணோம்! இது என்னால் பொறுக்க முடியாது" என்று கூறியது அந்தப் பாம்பு.

உலக நாடுகளிடையில், ஒழுங்கையும் அமைதியையும் நிலைநாட்டுகிற சர்வதேசப் போலீஸ் காரனாகத் தன்னைப் பாவித்துக்கொள்கின்றவர்களின் வர்க்கத்தைச் சேர்ந்தது இந்தப் பாம்பு. அமைதியைப்பற்றிப் பேசுவதும் பரப்புவதும் தன்னுடைய கடமையாகக் கருதிக்கொண்டது அது. ஆகவே, அந்தத் தேனீக்கூட்டை அழித்துவிட்டு மறு காரியத்தைப் பார்ப்பது என்று தீர்மானத்துடன் வேகமாக மரத்தில் ஏறியது அந்தப் பாம்பு.

ஆனால், அங்கே போக முடியாமல் வெகுவேகமாக நழுவித் தரைக்கு வந்து சேர்ந்தது அது. ஏராளமான தேனீக்கள் மொய்த்துக்கொண்டு அதைத் தொடர்ந்து விரட்டியதால் ஒரு முள் புதருக்குள் விரைந்து புகுந்து பாம்பு மறைந்துவிட்டது.

தற்காலத்தை ஏகாதிபத்தியங்களின் ஆக்கிரமிப்புக் காலம் என்று பொதுவாகச் சொல்லுகிறார்கள். ஆனால், ஏகாதிபத்தியங்களை எல்லாப் பக்கங்களிலிருந்தும் எதிர்க்கிற ஒரு காலமாகவும் இந்தக் காலம் இருந்துவருகிறது.

நரியும் முயலும்

ஒரு நரி ஒரு முயலைப் பிடிக்கக் கருதி அதைப் பின்தொடர்ந்தது. முயல் வெகு வேகமாக நரியைச் சுற்றிச் சுற்றி ஓடியதால் நரிக்கு உடல் வியர்த்துத் தலைசுற்ற ஆரம்பித்துவிட்டது. அப்போது முயல் ஒரு முள்புதரின் அடியில் குழி தோண்டிக்கொண்டு நரி தன்மீது பாய்வதற்கு ஆசைகொள்ளும்படியாக அங்கே நின்றது. முயல் நினைத்தபடியே நரி அதன் மீது பாய்ந்தது. ஆனால், அந்த முள்புதரில் சிக்கிக் கொண்டு உயரத்திலே தொங்கியது. அதன் உடல் முழுதும் முட்கள் பாய்ந்து இரத்தம் சொட்டிற்று.

உடனே கோபம் பொத்துக்கொண்டு பொங்கி, அது முயலை நோக்கி ''ஆயுத பலத்தை நம்பிய போக்கிரியே! இரத்த வெறிகொண்ட பயங்கரவாதியே! மனிதர்களுடைய துன்பங்களையும் கஷ்டங்களையும் சாதகமாக்கிக்கொள்கிறவனே! நாஸ்திகனே!'' என்று பலவாறாகத் தனக்குத் தெரிந்த அத்தனை வசவுகளையும் கூறி, அந்த முயலை அந்த நரி வைதது.

இதற்குள் முயல் நெடுந் தூரம் ஓடிவிட்டது. அங்கிருந்து அது திரும்பிப் பார்த்து '' இவ்வளவு தானா? இன்னும் வேறென்னமும் உண்டா? நீ உண்மையாகவே நிரம்ப படித்தவனாச்சே! நீ சொன்ன பொன்மொழி யாவும் உனக்கே முற்றும் பொருந்தும். முயலைப் பிடிக்க முடியாத ஒரு கொள்ளைக்காரனுக்கும் பொருந்தும். சரி சரி; நான் போய் வருகிறேன் '' என்று கூறிச் சென்றது.

குரங்கும் பலகையும்

ஒரு ஆற்றோரத்தில் ஏராளமான பலகைகள் கிடந்தன. மிதப்புக் கட்டைகளில் ஏற்றிப்போய் பக்கத்திலுள்ள ஊரில் விற்பதற்காக அவை அங்கே கிடந்தன. அங்கிருந்த ஒரு குரங்கு தனக்கு ஒரு பலகை கிடைத்தால் அது பலவகையிலும் உபயோகப்படுமே என்று நினைத்து, எப்படி அதை எடுப்பது என்று யோசித்தது. "நான் அதைத் திருடமுடியாது. அது ஆபத்தான காரியம்! திடீரென்று எடுத்துக் கொண்டுபோய்விடலாம்; ஆனால் எல்லோரும் என்னைத் திருடன் என்று சொல்லிப் பழிப்பார்கள்; அது நன்றாக இருக்காது. ஒருவரும் இல்லாத சமயமாகப் பார்த்து ஒரு கட்டையை இழுத்து ஆற்றில் எறிந்துவிட வேண்டும். பிறகு, ஆற்றில் தானாக மிதந்துவந்த கட்டையை நான் எடுத்துக்கொள்வது போலச் சென்று அதை நான் எடுத்துக்கொள்ள வேண்டும். அப்படிச் செய்தால் கட்டையையும் நான் கொண்டுவந்ததாகிவிடும். யாரும் என்னைக் குறைகூறவும் முடியாது. இதுதான் நேர்மையான நியாயமான முறை!" என்று கூறிக்கொண்டது.

அவ்வாறே அங்கே யாரும் இல்லாத சமயம் பார்த்து, ஒரு பலகையைத் தூக்கி ஆற்றில் எறிந்துவிட்டுக் குரங்கு அதன்மீது பாய்ந்தது. அந்தக் குரங்கிற்கு நன்றாக நீந்தத் தெரியாது. ஆற்றிலே தண்ணீர் வேகமாகவும் ஆழமாகவும் பாய்ந்து ஓடியது. அதனால் குரங்கு அந்தப் பலகையைப் பிடித்துக்கொண்டு திக்குமுக்காடித் தத்தளிக்க

நேர்ந்தது. சில சமயம் குரங்கு தண்ணீருக்கு மேலே காணப்பட்டது. சில சமயம் பலகை மேலே தென்பட்டது. இப்படியாகப் பலகையும் குரங்கும் மேலும் கீழுமாக ஆற்றின் வழியே சென்றன. கடைசிவரை குரங்கால் கரைக்கு வந்துசேர முடியவில்லை. முடிவில், தண்ணீரை அதிகமாகக் குடித்ததனால் பலகையை விட்டுவிட்டது. தண்ணீருக்குள் மூழ்கி அது இறந்து போய்விட்டது.

இதைப் பார்த்ததும் எனக்கு ஏகாதிபத்திய வாதிகளின் நினைப்பு வந்தது. அவர்களுக்குத் தங்களது திறமையில் அபார நம்பிக்கை யுண்டு. தாங்கள் எந்த நாட்டைப் படையெடுக்க விரும்பு கிறார்களோ அந்த நாட்டை இப்படித்தான் திண்டாட்டத்தில் இறக்கிவிட்டு, பிறகு அதைக் காப்பாற்றத் தலையெடுப்பார்கள். இந்தத் தந்திரத்தினால் அந்த நாட்டை சொந்தமாக்கிக்கொள்ளலாம் என்பது அவர்களுடைய அந்தரங்க நினைப்பு. ஆனால் முடிவோ எப்பொழுதும் அவர்களுக்குத் தோல்வியாகவே வந்து சேரும். பல பெரிய கஷ்டங்களுக்கும் போராட்டங்களுக்கும் ஆளாகி அல்லல்பட்டு, தங்கள் முயற்சியைக் கைவிட நேரும்; இல்லையேல் அழிவு என்ற படுபாதாளத்தில் அவர்கள் இழுத்து எறியப்படுவார்கள்.

பாம்பும் குழிமுயலும்

எல்லாரும், அவரவர் வீட்டில் சுதந்திரமாய் வாழவேண்டும். வேறு யாரும் அந்தச்சுதந்திரத்தில் தலையிடக் கூடாது என்று ஒரு சட்டம் இயற்றி அதைத் தானே நேரில் முயலினிடம் சொல்லுவதற்காக ஒரு பாம்பு ஒரு முயலின் வீட்டுக்குச் சென்றது.

முதலில் அதைப் பார்த்து "உன் வாசல் கதவைத் தட்டிக் கூப்பிடாமலும் உன் அனுமதியில்லாமலும் உன் வீட்டிற்குள் நான் நுழைந்தால் நீ என்னிடம் முறையிடுவதற்கு உனக்கு உரிமை இருக்கிறது" என்று சொல்லியது.

அந்த உரிமையைக் குழிமுயலுக்கு அளித்த போதிலும் அதற்குப் போதிய அளவில் வலுவான சட்ட உணர்ச்சி இருக்கிறதா என்பதில் பாம்புக்குச் சந்தேகம் பிறந்தது. மேலும் தன்மீது உள்ள அவநம்பிக்கையை முயல் கைவிட்டிருக்காது என்ற எண்ணமும் அதன் மனத்தில் இருந்ததால் அது விஷயமாக முயலைச் சோதித்துவிட வேண்டும் என்று அந்தப் பாம்பு தீர்மானித்தது.

எனவே, கதவைத் தட்டாமல் வேகமாய் உள்ளே நுழைந்து, அதன் குட்டி ஒன்றைக்கொன்று விட்டு, வேகமாய்த் திரும்பி வெளியே வந்து, வாசல் அண்டை உட்கார்ந்துகொண்டு முயல் முறையிடுகிறதா என்று பார்த்தது.

நெடு நேரம் காத்திருந்தும் முயல் வரவில்லை. ஒவ்வொரு நிமிஷமும் பாம்புக்குக் கோபம் அதி

கரித்தது. மீண்டும் வேகமாய் முயலின் வீட்டிற்குள் சென்று அதைப் பிடித்துக்கொண்டு "நீ ஏன் சட்டப்படி நடக்கவில்லை?" என்று கேட்டது.

குழிமுயல்: "கனவானே! எந்தச் சட்டம்? யாரைப்பற்றி முறையிடுவது?"

பாம்பு: "நீ ஏன் குற்றம் சாட்டவில்லை?"

முயல்: "கனவானே! சற்று நேரத்திற்கு முன்புகொள்ளைக்காரனாய்இருந்ததும்இப்பொழுது



நீதிபதியாய் இருப்பதும் தாங்கள்தான். நான் எந்தக் கொள்ளைக்காரனைப் பிடித்து எந்த நீதிபதியிடம் முறையிடுவது? சொல்லுங்கள்"

இதைக் கேட்டதும் அளவுகடந்த கோபம் கொண்டு முயலைப் பிடித்து ஒரே அடியில் வாயில் போட்டுக்கொண்டது அந்தப் பாம்பு.

"இந்தத் தடவை நான் முயலைக் கொன்றது முந்தின மாதிரி அல்ல. இப்போது எல்லாம் சட்டப்படியே செய்தேன். அதைக் கைது செய்தது முதல் தீர்ப்பளித்ததுவரை எல்லாம் சட்ட முறைப் படியேதான் நடைபெற்றன" என்று எல்லோருக்கும் அந்தப் பாம்பு அறிவித்தது.

ஓநாயும் விறகுவெட்டியும்

ஒரு விறகுவெட்டி மலேமீதேறி வருகிருன் என்று கேள்விப்பட்டதும் தனது திட்டத்தைப் பாட்டாகப் பாடிற்று ஒரு ஓநாய்.

"படித்தவன் நான்; ஆகையால்
பலத்தைத் தவிர்த்து அறிவால்
முடித்திடுவேன் சண்டையினே.
முழுதும் வெற்றி எனக்கே!
கத்தி கம்பு ஆயுதங்களேக்
களேயச் செய்து அந்தக் காடுவெட்டியை,
காட்டினிலே நான் கொன்றிடுவேன்.

இவ்வாருகப் பாடிவிட்டு, ஓரிடத்தில் மரத்தின் அடித்தூறு இருப்பதுபோல அமர்ந்து அவன் வருகையை எதிர்பார்த்துக்கொண் டிருந்தது. விறகுவெட்டியும் வந்தான். மலேமீது பார்வையைச் செலுத்திப் பாட ஆரம்பித்தான்.

அருகிலிருந்து பார்த்தாலும்,
அதிகத் தூரம் சென்ருலும்,
மரத்தின் தூறு தெளிவாக
மரத்தூருகவே தோன்றுவதால்,
நான் வைத்திருக்கும் எறியலிஞல்
அதைக் கணுக்கணுவாகப் பிளப்பேனே!

என்றவாறு பாடிஞன். அவ்வளவுதான் ஓநாய் பறந்தோடியது. எப்பொழுது எதிரியின் சூழ்ச்சி அம்பலமாகிறதோ, அப்பொழுதே, அந்தச் சூழ்ச்சியும் கூடவே அழிந்து போகிறது.

கரடியும் மற்ற மிருகங்களும்

மிக்க அகந்தையோடு தன்னையாரும் அறிந்து கொள்ள முடியாமல் மலையுச்சியில் உட்கார்ந்து கொண் டிருந்தது ஒரு கரடி. அதைக் கண்டதும் அங்கிருந்த புலி, சிறுத்தை, ஓநாய், காட்டுப்பன்றி ஆகிய மிருகங்கள் கோபமும் வெறுப்பும் அடைந்தன. மனத்தில் கரடியைக் கண்டு அவற்றுக்குத் திகிலும் உண்டாயிற்று.

"நம்மால் அதைத் தோற்கடிக்க முடியாது; திடீரென்று தாக்குவதுதான் ஒரே வழி" என்று அவை பேசிக்கொண்டன. அதற்காக அவை ரகசியமாக ஒன்றுகூடிக் கரடியைத் தொலைப்பதற்கு வழி பார்த்தன; மலையைச் சுற்றி ஆழமான குழி தோண்டி, அதனுள் கழுமரங்களை நட்டுவைத்தன. மலையைவிட்டு இறங்கிக் குழிக்குள்ளே வந்துவிழுந்தால் கரடியின் கதி ஆபத்துதான். ஆனால், அந்தக் கரடி மட்டும் கீழே இறங்கி வரும்படியாக செய்து விட்டார்களானால் போதும் என்று முடிவு செய்தன.

எல்லா ஏற்பாடுகளும் செய்து முடித்த பின்பு, அந்த மிருகங்கள் ஒரு பறவையைத் தூது அனுப்பின. ஒரு மாட்டைக் கொன்று விருந்து சாப்பிடப் போவதாகவும் கரடி வந்த பின்புதான் விருந்து தொடங்கப் போவதாகவும் ஆகவே கரடி வரவேண்டும் என்றும் சொல்லியனுப்பின. ஆனால் கரடியோ ஒரு வார்த்தைகூடச் சொல்லவில்லை.

மிருகங்கள் நெடு நேரம்வரை காத்திருந்து பார்த்தன. கரடி வந்துசேரவில்லை. இதனால் தங்களுடைய முதல் முயற்சி தோல்வியடைந்துவிட்டது என்பதை அறிந்த அந்த விலங்குகள், மீண்டும் முயற்சி செய்தன. விஷங்கலந்த உணவைச் சாப்பிட்டு இறந்தவைபோல நடித்துத் தரைமீது கிடந்தன. மீண்டும் அந்தப் பறவை மூலம் 'தாங்கள் இறந்து போய்விட்டதாகவும் தாங்கள் வைத்து விட்டுச் சென்ற அதிகமான சொத்துக்களுக்குக் கரடிதான் வாரிசு' என்றும் சொல்லியனுப்பின. அப்பொழுதும் கரடி ஒரு வார்த்தைகூடச் சொல்லவில்லை.

மறுபடியும் தோல்வியடைந்த அந்த மிருகங்கள் மூன்றாவது முறையாக முயன்றன. கரடி இருக்கின்ற மலை, ஒரு எரிமலையென்றும், அது வெடிக்கப் போகிறதென்றும் அதைவிட்டு நீங்காவிட்டால் கரடி எரிந்து சாம்பலாகிவிடும் என்றும் அந்தப் பறவை மூலம் சொல்லியனுப்பின. அதற்கும் ஒன்றும் பேசாமல் கரடி சிரித்தது.

தங்களுடைய முயற்சிகள் எல்லாம் வீணானது கண்டு மலையுச்சியை நோக்கித் தாறுமாறாகத் திட்டின. இதைக் கேட்டாவது கரடி கீழே யிறங்கி வராதா? என்று அந்த விலங்குகள் பார்த்தன.

கரடியோ அவைகளின் திசையில்கூட திரும்பிப் பார்க்காமல் அமைதியாக இருந்தது. "தங்களது கை வரிசை எல்லாம் காட்டிய பிறகு இப்பொழுது வெறும் தம்பட்டம் அடிக்கிறார்கள்" என்றுகூறிற்று.

நல்லவன்போல நடிக்கின்ற எதிரியின் வார்த்தைகளை நம்பாதவன், அந்த எதிரியின் வலைகளில் ஒரு போதும் சிக்கிவிட மாட்டான்.

சிங்கமும் ஆட்டுக் குட்டியும்

சிங்கத்தின் பிடியில் அகப்பட்ட ஆட்டுக்குட்டி ஒன்று கண்ணீரும் கம்பலையுமாக அழுது அழுது கதறிக் கெஞ்சியதால், சிங்கம் மனமிரங்கி அதை ஒன்றும் செய்யாமல் விட்டுவிட்டது. ஆனால் ஆட்டுக் குட்டியோ உடனே கவலைமாறிச் சிங்கத்திற்கு தன்மீது பிரியம் உண்டாகிவிட்டதாக எண்ணி, ஓடாமல் அங்கேயே தங்கிவிட்டது. "சரி இங்கேயே இருப்பேன். சிங்கம் திரும்பி வந்து என்னை தன்னுடைய அபிமான புத்திரனாக ஆக்கிக்கொள்ளும்" என்று நினைத்து அங்கேயே தைரியமாக நின்றுகொண் டிருந்தது. இரை தேடச் சென்று திரும்பிய சிங்கமோ, இன்னும் ஆட்டுக் குட்டி அங்கேயே தங்கி யிருப்பதைக் கண்டு, அதை ஒரே விழுங்கில் தன் வாயில் போட்டுக்கொண்டுவிட்டது.



மூன்று வேடர்களும் கரடியும்

தைரியமான மூன்று வேடர்கள் ஆளுக்கொரு துப்பாக்கியை எடுத்துக்கொண்டு கரடி வேட்டை யாடுவதற்கு மலைக்குச் சென்றார்கள். மலையுச்சி யில் ஒரு கரடி யிருப்பதை வெகு தூரத்திலேயே கண்டு மகிழ்ச்சி யடைந்து, "சீக்கிரம் அதனிடம் செல்வோம். இல்லாவிட்டால் அது ஓடிப் போய் விடும்" என்று கத்தினார்கள்.

அவர்கள் மலைமீது ஓடினார்கள். கரடியோ அவர்களை நோக்கிக் கீழிறங்கி வேகமாக, பாதித் தூரத்திற்கு வந்துவிட்டது. அவர்கள் திகிலடைந்து விட்டார்கள். மனதில் கலவரமடைந்து "நல்லது அது நம்மைத் தாக்குகிறது. நாமும் அதைத் தாக்கு வோம்" என்றார்கள்.

வேகமாகச் சென்ற அவர்கள் கரடியையும் கடந்து விட்டார்கள். சற்று தயங்கி திரும்பிப் பார்த்தபொழுது, கரடியும் திரும்பி தங்களைப் பின் தொடருவதைப் பார்த்தார்கள். ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்தார்கள்; பயத்தினால் அவர்கள்முகம் வெளுத்துவிட்டது. "மிகவும் வேகமாகப் பாய்ந்து விட்டோம். நமது இலக்கையும் தாண்டிவிட்டோம். இது மிகவும் ஆபத்தானது. கரடி நம்மைத் துரத் திக் கொண்டுவருகிறது. நாம் அதன்முன் ஓடிக் கொண்டிருக்கிறோம்" என்று சொன்னார்கள்.

உடனே அவர்கள் திரும்பி அந்தக் கரடியை நெருங்கித் தாக்க வேண்டும் என்று தீர்மானித் தார்கள். ஆனால் அந்தக் கரடி பாதி வழியில் நின்று

விட்டது. அவர்கள் தன்னிடம் வரட்டு மென்று காத்திருப்பதைப்போலத் தென்பட்டது. அவர்களும் இதைக் கண்டு தயங்கி நின்றுவிட்டார்கள். "நம்முடைய யோசனை தவருனது. அது நமக்காகக் காத்துக்கொண் டிருக்கிறது. நாமாக வலியப் போய் அதன்மீது விழுவதா?" என்ருர்கள்.

மரம்போல அசையாமல் நின்று கரடியை உற்றுப் பார்த்தார்கள். கரடியும் அவர்களையே பார்த்துக்கொண் டிருந்தது. இவ்வாறு திகில் பிடித்த நிலைமை நெடு நேரம் நீடித்திருந்தது. மீண்டும் காரியத்தில் இறங்கினுர்கள். "நமக்கு நேர் முன்னுல் அது இருக்கிறது; நாம் எல்லோரும் ஒருமுகமாக அதைப் பார்த்துச் சுட்டா லென்ன?" என்று யோசித்தார்கள்.

உடனே எல்லோரும் ஒன்ருகத் துப்பாக்கிகளைத் தூக்கி, குறிவைத்துச் சுட்டார்கள். கரடியும் சும்மாயிருக்க வில்லை. நாலா மூலேயும் பாய்ந்தது. ஒரு நிமிடம் அது கிழக்கில் காணப்படும்; அடுத்த நிமிடம் அது மேற்கில் தென்படும்; பிறகு பார்த்தால் மலை முழுதுமே கரடிகள் நிறைந்திருப்பதாகத் தோன்றும். ஆகையால் அவர்களுடைய குறியும் தப்பியது. சுடுவதை நிறுத்திவிட்டுப் பார்க்கும் பொழுது கரடி முன்பு இருந்த இடத்திலேயே இருப்பதாகத் தெரிந்தது.

"அந்த இடத்தைவிட்டு அது நகரவேமாட்டாதோ? அப்படியானல் அதை ஒரு மூலைக்கு விரட்டிச் சுற்றி வளைந்துகொண்டு கொல்லுவோம்" என்று திட்டமிட்டார்கள்.

உடனே இடது பக்கத்திற்கும் வலது பக்கத்திற்குமாகப் பிரிந்து சென்ருர்கள். ஆபத்து ஏற்பட்

டால் ஒருவருக்கொருவர் உதவி செய்வதற் கேற்ற படியும் கரடி தப்பிப்போக முடியாதபடியும் சூழ்ந்து நின்றார்கள். இப்பொழுதோ கரடி அவர்களைத் தனித் தனியாக தாக்குவதுபோலத் தோன்றிற்று. பயத்தினால் அலறி உயிர்பிழைப்பதற்காகப் பாய்ந் தோடினார்கள். கடைசியாக, அவர்கள் மலையுச்சியில் ஒன்று சேரலானார்கள். கரடியோ இப்பொழுது மலை யடிவாரத்தில் நின்றது. வேடர்களுக்கு வீடு திரும்பு வதைத் தவிர வேறு வழியில்லை. இதற்குள் இருட்டி விட்டது. திரும்புகையில் மனம் சலிப்படைந்து வருந்தினார்கள்.

"நாள்முழுதும் வேட்டையாடி ஆபத்துக்குள் ளாகியும் பயன் ஒன்றுமில்லை. நாம் கரடியை வேட்டையாட வில்லை. கரடிதான் நம்மை வேட்டை யாடிவிட்டது. இது மிகவும் அவமானம்" என்றான் ஒருவன்.

"அவமானமாக இருந்தாலும் பரவாயில்லையே. இப்போதோ நமது தொல்லைகளுக்கு முடிவையே காணேமே. சும்மாயிருந்த கரடியைத் தூண்டிவிட் டோம். அது இனி நம்மைச் சும்மா யிருக்கவிடப் போவதில்லை. கஷ்டப்படப் போகிறோம்" என்றான் அடுத்தவன்.

"சரி. நாம் தப்பியோடுவோம். இதற்குள் அது நம்மைத் துரத்தி வந்தாலும் வரக் கூடும்" என்றான் மூன்றாவது மனிதன்.

இதுதான் மூடர்களின் போக்கு. வலுச் சண் டைக்கு வழி பார்த்துத் திரிவார்கள். ஆரம்பத்தில் தலைநிமிர்ந்து செல்வார்கள். திரும்பி வரும் பொழுது வாலை மடக்கிக்கொண்டு நழுவி வந்து சேருவார்கள்.

சேவலும் பூரான் பூச்சியும்

தரையில் ஊர்ந்து சென்ற மிகச் சிறிய பூரான் ஒன்றை ஒரு சேவல் பார்த்தது. தன்னுடைய இறக்கைகளைச் சிலிர்த்துக்கொண்டு முழு பலத்தோடு அதைக் கொன்று தின்ன முயன்றது.



ஏதோ ஒரு பெரிய எதிரியோடு சண்டை போடுவதற்காக முஸ்தீபு செய்வதைப் போன்று, சேவல் செய்யும் தடபுடலைக் கண்டு பக்கத்திலிருந்த வாத்து சிரித்துவிட்டு, அதைப் பார்த்து ஏளனமாக "ஏது? மலைகளையே அசைப்பதற்கு நீ முயற்சி செய்கிறாய் போலிருக்கிறதே!" என்றது.

"வேறு என்ன செய்வது? நமது பகைவர்கள் மிக மிக அற்பமானவர்களாக இருந்தாலும் அவர்களைப் பகைவர்களாகவேதான் என்றும் நடத்த வேண்டும்" என்று பதிலளித்தது சேவல்.

யோக்கியமான குரங்குகள்

ஒரு பழத்தோட்டத்திற்குள் புகுந்த இரண்டு குரங்குகள் தங்களுக்குள்ளே ஒரு கட்டுப்பாட்டை ஏற்படுத்திக்கொண்டன. "நம்முடைய குரங்கு இனத்தில் திருட்டுத்தனத்தை ஒழிக்க விரும்புகிறோம் அல்லவா? நமக்கு நாமே ஒரு கட்டுப்பாடு செய்துகொள்ளாவிட்டால் ஒன்றும் பயன்படாது. உதாரணமாக, நான் உன்னைக் கவனிக்கிறேன். நீ என்னைக் கவனி. இதனால் திருடுவதற்கு நாம் ஆசைப்பட்டாலும், நம்மால் அதைச் செய்ய முடியாமல் போய்விடும்" என்று சொல்லி, அவ்வாறு நடப்பது என முடிவுசெய்துகொண்டன.

ஒரு குரங்கு, தன்னை அடுத்திருந்த மற்ற குரங்கு காணாத சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு ஒரு பழத்தைப் பறித்து, உடனே அதைத் தன் வாயில் திணித்துக்கொண்டு அடுத்த குரங்கைக் கவனிக்கத் திரும்பியது.

அடுத்த குரங்கோ, முதல் குரங்கு பழம் பறித்த அந்த நேரத்தை வீணாக்காமல் தானும் ஒரு பழத்தைப் பறித்து, அதைத் தன் வாயில் போட்டு திணித்துக்கொண்டு தன் நண்பனைக் கண்காணிக்கத் தொடங்கியது.

இவ்விதமாக இரண்டு குரங்குகளும் வாயை மூடிக்கொண்டு ஒன்றை ஒன்று கண்காணித்துக் கொண்டிருந்தன.

விரைவில் ஒன்றை ஒன்று அறிந்துகொண்டன. வாயைத் திறவாமல் மூக்கினால் 'நீ....நீ,' என்று

சொல்லிக்கொண்டன. கோபம் கொண்டு இகழ்ந்தன. ஒன்றை ஒன்று திட்டுவதற்கு ஆசைப்பட்டன. அப்போது திடீரென்று சிரிப்பு வந்ததனல் அவற்றின் வாயிலிருந்த பழங்கள் நழுவி வெளியே வந்து விழுந்தன.

உடனே அவை கலகலவென்று சிரித்து, விழுந்த பழங்களை எடுத்து, தத்தம் வாயில் போட்டுக் கொண்டன. மறுபடியும் முன்போல ஒன்றையொன்று கண்காணிக்க ஆரம்பித்தன.

"உனக்கு விஷயம் தெரியும்."

"எனக்கும் விஷயம் தெரியும்."

"ஆனல் நாம் அதை வெளியே சொல்வதற்கில்லை. அவ்வளவுதான்" என்று ஒரு பாட்டைப் பாடி ஒன்றையொன்று வணங்கிவிட்டுப் பழத்தைத் தின்றன. தின்றுகொண்டே "நமது சச்சரவை எவ்வளவு நன்ருகத் தீர்த்துக்கொண்டோம்" என்று கூறின.



குரங்குகளும் பிரேதமும்

சாலை வழியே நடந்து சென்றுகொண்டிருந்த சில குரங்குகள் ஒரு கிழிந்த பாயில் சுற்றப்பட்டு வழியிலே ஒரு பிணம் கிடப்பதைக் கண்டன.

குரங்குகளின் தலைவன் அதைப் பார்த்துத் தலையசைத்துவிட்டு "அதோ பாருங்கள். இப்படி இருப்பது கேவலமல்லவா? நான் எப்பொழுதுமே கூறி வந்துள்ளதுபோல உயிருடன் இருக்கும் வரை எல்லாம் சரியாக நடைபெறுகிறது. இறந்து விட்டால் யாரும் எதையுமே கவனிப்பது கிடையாது. உயிருடன் இருக்கும்போது எப்படி வாழ்ந்தாலும் சரி. இறந்துவிட்டானுல் மரணமடைந்ததைப் பெரிய ஒரு சம்பவமாகக் கருதி செய்ய வேண்டிய சடங்குகளை விமரிசையாகச் செய்ய வேண்டும். செத்த பிறகு எப்படிப்பட்ட சமாதி தனக்கு வேண்டுமென்பதை முன்கூட்டியே கருதி அதற்கு ஏற்பாடு செய்யலாம். மனிதன் மனத் திருப்தி அடைகிற காரியம் இது ஒன்றுதான். வாழ்வின் முடிவு, சாவு என்று கருதப்பட்டாலும்கூட உடலைக் குன்றின்மீதுதான் புதைக்க வேண்டும். அப்படிச் செய்வதுதான் நியாயம். ஆனல், இந்த சந்தர்ப்பத்தில்தான் இறந்த உடலுக்கு மரியாதை செய்வதை யாரும் தங்களுடைய காரியமாக நினைப்பது கிடையாது. நாம் இப்பொழுது ஒரு நல்ல காரியத்தைச் செய்வோம், வாருங்கள். நாம் எல்லோரும் சேர்ந்து இந்தப் பிணத்தைக் குன்றின் உச்சிக்குத் தூக்கிச் செல்வோம்" என்றது.

அந்தக் குரங்குகள் பிணத்தைச் சுற்றி இரண்டு வரிசையாகப் பிரிந்து நின்று, கிழிந்துபோன அந்தப் பழைய பாயை மூலைகளைப் பற்றி சிரமப்பட்டு உறுதியாக உயரத் தூக்கின. பிறகு மெதுவாக குன்றின் உச்சிக்குச் சென்றன. கடைசியில் உச்சியை அடைந்து அங்கே பாயைக் கீழே வைத்தன. பிறகு சில நிமிஷ நேரம் அமைதியாகத் தலை வணங்கித் துக்கம்கொண்டாடின. பின்னர் கொஞ்சம் மண்ணை எடுத்துப் பாயின்மீது போட்டு அது புதைந்தவுடன் அப்பால் போய்விட்டன.

ஆயினும் அந்தப் பிணம் முன்பு சாலையோரத்தில் கிடந்த இடத்திலேயேதான் கிடந்தது. மேலும் இப்பொழுது அதை மூடியிருந்த பாயும் எடுக்கப்பட்டுவிட்டதால் வெட்ட வெளியில் ஒரே திறவையாக அது கிடந்தது.

நரியும் முயல்களும்

குழி முயல்கள் வாழ்கின்ற ஒரு பிரதேசத்திற்குள் ஒரு நரி ஓடிற்று. குழிமுயல்கள் காரணமின்றித் தாவிக் குதித்ததால் நரி அவைகளைத் துரத்திப் பிடித்தது. பிடித்தவற்றில் சில முயல்களை நரியால் தின்னாமல் இருக்க முடியவில்லை. அவ்வாறு தின்றதும் நல்லதாயிற்று. ஏனென்றால் அதன் பிறகு அந்த இடத்தில் அமைதி ஏற்பட்டது. நரிக்கும் வயிறு நிறைய உணவு கிடைத்தது. அந்த இடத்தைச் சுற்றிப் பார்த்து மனம் மகிழ்ந்து நரி தன் தலையை யசைத்துக்கொண்டது. "இந்த இடம் இதன் புகழுக்கேற்றபடி முதல் தரமாக இருக்கிறது. அழகான இயற்கைக் காட்சிகளும் நல்ல விளைச்சலும் நட்புரிமையும் உள்ள இடமாக இருக்கின்றது" என்று கூறியது.

கொஞ்ச நேரம் சுற்றிப்பார்த்த பிறகு அந்த இடம் மோசமாக இருப்பதைக் கண்டது. மனம் சலிப்படைந்து "மகா மோசம்! மகா மோசம்!" என்று கூறிப் பெருமூச்சுவிட்டது. "உயிர்ப் பிராணிகள் வாழ்கின்ற அறிகுறி ஒன்றையுமே காணேமே. குடியிருக்கிற இடம் வனாந்தரமாகிக் கொண்டிருக்கிறதே. எங்கு பார்த்தாலும் பிரேதங்களும் எலும்புகளும் இடிபாடுகளுமாக இருக்கின்றனவே. பிரேதங்கள் புதைக்கப்படாமல் கிடைக்கின்றனவே!" என்று வருத்தமடைந்தது.

இந்த நிலைமையைக் கண்டு நரியால் சகிக்க முடியவில்லை. அதனுடைய நெஞ்சில் இரக்கம் ஊற்

றெடுத்துப் பாய்ந்தது. முயல்களின் எலும்புகளைத் தன் கையாலேயே ஒன்றுசேர்த்துக் குழி தோண்டிப் புதைத்து, நல்ல காரியத்தைச் சாதித்துவிட்டதாக நினைத்துத் தன் தலையசைத்துக்கொண்டு "என்னை நானே பாராட்டிக்கொள்ள வேண்டும். இங்கு வாழ்ந்த மக்களுக்கு ஏற்ற சமாதியை அவர்கள் ஓய்வு பெறுவதற்காக நான் ஏற்படுத்தி இருக்கிறேன். அவர்கள் என் புகழைப் பாடிக் கொண்டு இருப்பார்கள்" என்று கூறியது.


தர்ம நியாயமான அரசாங்கம் நடைபெற்றதை நினைவுபடுத்துவதற்காக ஒரு நினைவுச் சின்னமும் எழுப்பியது.

நரி அந்த இடத்தைவிட்டு நீங்கும்போது ஒரு கனம் அங்கு நின்று "நல்லது. குடிகளுக்கு நான் எவ்வளவு நன்மை செய்ய முடியுமோ அவ்வளவும் செய்திருக்கிறேன். ஜனங்களுக்கு உண்மையான தந்தையாக இருந்திருக்கிறேன். வரும்போது குறைந்த சம்பளத்திற்குச் சேவை செய்ய வந்தேன். போகும்போது வெறுங் கையோடு போகிறேன்" என்று தனக்குள் சொல்லிக்கொண்டது.

பசுவும் கயிறும்

ஒரு பசுவும் நாயும் வீட்டைவிட்டு ஓடிப்போய் தூரத்திலுள்ள மலைகளில் சுதந்திரமாக வாழலாம் என்ற முடிவுக்கு வந்தன.

இருட்டிற்று. முன்செய்த முடிவுப்படி மாட்டைக் கட்டியிருந்த கயிற்றை தனது கூரிய பற்களால் நாய் கடித்து அறுத்தது. ஆனால், பசு அதைத் தடுத்து "இது நல்ல கயிறு. இதைப் பாழாக்க



வேண்டாம். எனக்கோ வேறு ஒரு சொத்தும் இல்லை. இதை வைத்துக்கொள்ள எனக்கு ஆசையாக இருக்கிறது. இதைக் கடித்துப் பாழாக்காமல் இதன் முடிச்சை மட்டும் அவிழ்த்துவிட்டால் போதும்" என்று கூறியது. நாயும் அவ்வாறே செய்தது. இப்பொழுது கயிறு பசுவின் மூக்கிலிருந்து நீளமாக இழுபட்டது. அப்படியே பசுவும் நாயும் வீட்டைவிட்டு வெளியே ஓடின.

ஆயினும், நாய் நெடுந் தூரம் ஓடியபின் திரும்பிப் பார்க்கும்போது பாதை யோரத்திலிருந்த ஒரு பெரிய கல்லில் பசுவின் மூக்குக் கயிறு மாட்டிக்கொண்டதால் அது பின்தங்கி நிற்பதைக் கண்டது. அதைத் தேடிவந்த சொந்தக்காரன் எளிதாக அதைப் பிடித்துக்கொண்டு தன் வீடு சென்றான்.

"இந்தக் கயிற்றை வைத்துக்கொள்ளவேண்டுமென்று ஆசைப்பட்டேன். அதுதான் என்னுடைய ஒரே தவறு. பொருளாசை உண்மையிலே எனது நாசத்திற்குக் காரணமாயிற்று" என்று அந்தப் பசு வருந்தியது.



அதிசயமான காக்கை

காக்கை ஒரு அதிசயமான பறவை. "ஒரு தடவையில் நான் எவ்வளவு தூரம் பறக்கிறேனே அவ்வளவு தூரத்துக்குட்பட்ட நிலத்துக்கு நான் தான் அரசன்" என்று சொல்லிக்கொண்டது.

"அங்கே வேறு எந்தப் பறவையும் வானத்தில் பறக்கக் கூடாது, தரையில் நடக்கக் கூடாது, மரத்தில் கூடு கட்டக் கூடாது என்று சட்டம் போட்டு விட வேண்டும்" என்று தீர்மானித்தது.

இதில் உள்ள கோளாறு என்ன வென்றால், இப்படிப்பட்ட அரசனது ஆட்சியிலே எல்லாப் பறவைகளும் சட்ட விரோதிகளாகவே இருக்க நேரும். எல்லாப் பறவைகளும் எப்போதும்போல, வானத்தில் பறந்தன, தரையில் நடந்தன, மரங்களில் கூடுகட்டின. இக் காரியங்கள் அரசனை முட்டாளாகக் காட்டிற்று.

காக்கை ஒரு அதிசயமான பறவை. தன் கண்களைச் சுழற்றிக்கொண்டு "தற்சமயத்திற்கு நீங்கள் பறக்கலாம். நடக்கலாம். கூடு கட்டிக்கொள்ளலாம். நான் அனுமதிக்கிறேன். தாராள மனோபாவத்தினால் இந்தச் சலுகையை அளிக்கிறேன்" என்று கூறியது.

அதன் பிறகும் பறவைகள் இதை உணர்ந்ததாகத் தெரியவில்லை, ஏனென்றால் அவை காக்கைக்கு நன்றி காட்டாததோடு மட்டுமன்றி அதன் வார்த்தைகளைக் காதில் போட்டுக்கொண்டதாகவே காணோம். எப்போதும்போல, அவை

பறந்தன ; நடந்தன ; கூடு கட்டிக்கொண்டன. இதைப் பார்க்கையில் அரசன் முட்டாளாகவே காணப்பட்டான்.

இருந்தாலும் காக்கை ஒரு அதிசயமான பறவை. "நீங்கள் பறப்பதற்கும் நடப்பதற்கும் கூடு கட்டுவதற்கும் நான் தனிச் சலுகை அளிக்கிறேன். எவ்வளவு தாராளமாக நடந்துகொள்கிறேன் பார்த்தீர்களா?" என்று திரும்பவும் சொல்லிற்று.

காக்கை ஒரு அதிசயமான பறவை. உண்மையாகவே ஆற்றலுள்ள கொடுங்கோலர்கள் காட்டுகிற தாராளமும் அந்தக் கொடுங்கோன்மையோடு சேர்ந்ததே ஆகும் என்று இந்தக் காக்கை நமக்குப் போதிக்கிறது. கொடுங்கோன்மையினுல் அவர்கள் மக்களது உரிமைகளைப் பறிப்பார்கள். தாராளமாக நடந்துகொள்வதன் மூலம் குடிமக்களினுடைய கௌரவத்தைத் தொலைப்பார்கள். மனக் குழப்பமும் வீண்கர்வமுமுள்ள கொடுங்கோலர்களான இவர்கள் திறமையற்றவர்களாய் இருக்கிற காரணத்தினுலே மிகவும் கொடியவர்களாக இருப்பார்கள். ஆனுல் அதே சமயத்தில் குடிகளிடம் தாங்கள் தாராளமாக நடந்துகொள்வதாகவும் அடிக்கடி இவர்கள் சொல்லிக் கொள்வார்கள்.

குரங்கு வைத்தியர்

ஒரு கழுதைக்குக் கடுமையான நோய் கண்டிருந்தது. டாக்டரைப் பார்த்து "எனக்கு என்ன வியாதி பாருங்கள்; என் உடலில் இரத்தம் ஓட வேண்டும் என்று ஆசைப்படுகிறேன். ஆனால், அது நின்று வருகிறது. என் கைகால்களை அசைக்கப் பெரிதும் முயலுகிறேன். ஆனால், அவை அசைய மறுக்கின்றன. எனக்கு உயிரோடு இருக்க ஆசையாக இருக்கிறது. ஆயினும் சாவு மிக நெருங்கி விட்டது. ஐயோ, டாக்டர்" என்று அழுதது.

அந்த டாக்டர் புகழ்பெற்ற ஒரு குரங்கு. அது தலையசைத்துக்கொண்டு சொல்லிற்று: "உண்மைதான். உன் உடலில் இரத்தம் ஓட வேண்டுமென்று ஆசைப்படுகிறாய். ஆனால், அது நின்றுகொண்டு வருகிறது. நீ கைகால்களை அசைக்கப் பார்க்கிறாய்; ஆனால் அவை மறுக்கின்றன. நீ உயிர் வாழ விரும்புகிறாய். ஆனால்...." என்று இழுத்தது.

"அப்படியானால்....ஐயையோ!"

"ஆமாம்...."

குரங்கு மருந்து ஒன்றும் எழுதிக் கொடுக்கவில்லை. கழுதை நிம்மதியாகக் கண்ணை மூடுமாறு விட்டுவிட்டது.

குணப்படுத்த முடியாத அளவுக்கு மோசமான நிலையிலுள்ள நோயாளிகளுக்கு மருந்து எழுதிக் கொடுக்காத டாக்டர்களே உலகத்தில் திறமையும் நேர்மையும் மிக்கவர்கள்.

கிராமப் பெண்ணின் விருந்து

ஒரு ஓநாயும் நரியும் பெரிய அதிகாரிகள் போல வேஷம் போட்டுக்கொண்டன. ஒரு குரங்கு அவற்றின் வேலைக்காரனைப்போல வேஷம் போட்டுக்கொண்டது. பழங் காலத்தைப்போல இப்போதும் நல்ல பண்புடையவர்களாக மக்கள் இருக்கிறார்களா என்பதைப் பரிசீலனை செய்ய அவை புறப்பட்டன.

காட்டைக் கடந்து பள்ளத்தாக்கில் இறங்கின. உடனே அருகிலிருந்த ஒரு கிராமத்துப் பெண்ணை அவைகள் சந்தித்தன. ஓநாய் "நமது பரிசீலனையைத் தொடங்குவோம். இவள் நிரம்ப நேர்மையானவள் என்பது உறுதி. இவள் நம்மை ஏமாற்ற மாட்டாள் என்று நினைக்கிறேன்" என்று கூறியது.

"நேர்மை என்பது ஒரு நல்ல குணம். நான் எழுதும் கட்டுரைகளில் எப்போதும் வலியுறுத்திக் கூறுவதைப்போல, நேர்மை என்பது பொது மக்களுக்கு அவசியம்" என்றது நரி.

"உண்மை உண்மை" என்றது குரங்கு.

ஓநாயும் நரியும் அவளை அணுகி "அம்மா! நீ நல்லவளாகத் தோன்றுகிறாய். உன்னிடம் கோழிக் குஞ்சு இருக்கிறதா? எங்களுக்கு நிரம்ப வேண்டாம். ஒன்றே ஒன்று போதும்" என்றன.

"நான் சைவம்; எனக்குக் கொஞ்சம் கடலை போதுமானது" என்றது குரங்கு.

"உங்களை வரவேற்கிறேன்; வாருங்கள். உங்களைப் போன்ற பெரிய மனிதர்கள் எப்போதாவது

தான் வருவார்கள். நீங்கள் வந்தது, எனக்கு எதிர் பாராத கௌரவம்" என்ருள் அப் பெண்.

வீட்டை அடைந்ததும் ஓநாயும் நரியும் ஆளுக்கொரு கோழிக் குஞ்சைத் தின்றன. குரங்கோ ஒரு தட்டு நிறையக் கடலையைத் தின்றது. ஆனல் அவைகளுக்குத் திருப்தி ஏற்படவில்லை.

"ஏதாவது ஆடு இருக்குமா? ஒரு ஆடு நாலு கோழிக் குஞ்சுக்குச் சமம்" என்று ஓநாயும் நரியும் கூறின.

"பட்டாணிக் கடலை இருக்குமா? மலிவான பண்டங்கள்தான் எனக்குப் பிடிக்கும்" என்றது குரங்கு.

"என்னிடம் ஒரு ஆடு இருக்கிறது. பட்டாணிக் கடலையும் வேண்டிய அளவு இருக்கிறது. நன்ருகச் சாப்பிடுங்கள்" என்ருள் அக் கிராமத்துப் பெண்.

ஓநாயும் நரியும் அந்த ஆட்டைத் தின்று விட்டன. பட்டாணிக் கடலையில் பாதியைத் தின்று விட்டுப் பாதியைத் தான் கொண்டுவந்திருந்த சாக்கினுள் போட்டுக்கொண்டது குரங்கு. பின்னும் ஓநாயும் நரியும் திருப்தி அடையவில்லை.

"வேறு மாதிரி உணவு இருந்தால் தேவலை. பன்றிகளுண்டோ?" என்றன ஓநாயும் நரியும்.

"கொஞ்சம் முந்திரிப் பருப்பு கொண்டு வா" என்றது குரங்கு.

"என்னிடம் நன்ருகக் கொழுத்த பன்றி இருக்கிறது. அதைப் பாருங்கள் என்று சொல்லலாம் என்றிருந்தேன். முந்திரிப் பருப்பும் ஏராளமாக என்னிடம் உள்ளது" என்ருள் அவள்.

குரங்கு ஒரு கூடைப் பருப்பைச் சாக்கிலே கொட்டிக்கொண்டு மீதியைத் தின்றது. ஓநாயும்

நரியும் பன்றியைத் தின்றன. என்றாலும் அவற்றுக்குப் பசி அடங்கவில்லை. பசி காரணமாக அவை கோபம் கொண்டன.

"உன் பசுவைக்கொண்டுவா!" என்று அவை உத்தரவிட்டன.

"கொஞ்சம் பாதம் பருப்புக் கொண்டுவா" என்றது குரங்கு.

அப்பெண் பசுவையும் பாதாம் பருப்பையும் கொண்டு வந்தாள்; அவற்றை அவை தின்றன. ஓநாய்க்கும் நரிக்கும் பின்னும் பசி அடங்கின பாடில்லை. குரங்குக்கும் வேறு ஏதாவது தின்றால் தேவலை போலிருந்தது.

. "வேறு என்ன வைத்திருக்கிறாய்?" என்று அவை கேட்டன.

"இன்னும் ஒன்று வைத்திருக்கிறேன்!" என்றாள் அவள்.

உள்ளே போய் மரம் வெட்டுகிற கோடரியைக் கொண்டுவந்து அது எவ்வளவு ருசியாக இருக்கும் என்பதைக் காண்பித்தாள். ஓநாயும் நரியும் குரங்கும் அவளுடைய குடிசையிலிருந்து உயிரோடு வெளிவரக் காணோம்.

கஸ்தூரிமானும் வேடனும்

பல நாட்களாகப் பனி பெய்ததால் எல்லாக் குன்றுகளும் பனியால் மூடிப்பட்டு வெள்ளை வெளே ரென்று பெரிய ரொட்டித் துண்டுகள்போலக் காட்சி யளித்தன. தரையின்மேல் எங்கும் பனி மூட்டம் இருந்ததால் மேடு, பள்ளம், கல், புதர் என்பவை ஒன்றும் தெரியாமல் மறைந்துவிட்டன.

தனது குகையில் வாழ்ந்துகொண் டிருந்த ஒரு மான் ஜன்னலைத் திறந்து வெளியே பார்த்துவிட்டு "மிக நன்றாக இருக்கிறது. இதுதான் எனக்குப் பிடித்தமான காலநிலை. தங்கியிருப்பதற்குக் கண கணப்பான அறை இருக்கிறது. ஏராளமான உணவு சேகரித்து வைத்திருக்கிறேன். வேடனால் என்னைக் கண்டுபிடிக்க முடியாது. தடம் முழுதும் மறைந்துவிட்டது" என்று சொல்லியது. அமைதி யாக வைக்கோலை மென்றுகொண்டு மறுபடியும் அந்த மான் இயற்கைக் காட்சியை நிம்மதியாக அனுபவிக்கத் தொடங்கியது.

பனி மூடிய நிலக்காட்சியை நினைத்த மாத்திரத் திலேயே தன்னை ஒரு கலாரசிகனாக நினைத்துக் கொண்டது அந்த மான். அதன் விளைவாக "இந்த மோசமான அறையிலிருந்து பனிக் காட்சியை ரசிப்பது இயலாத காரியம். மலையுச்சியில் எனக்கு ஒரு பங்களா இருக்கிறது. ஒரு குடம் மது வையும் கவிதைகள் அடங்கிய நூல் ஒன்றையும் எடுத்துக்கொண்டு சென்று அங்கே சில நாட்களைக்

கழிப்பேன்" என்று கூறி, மலையுச்சியிலுள்ள மற்றொரு குகைக்குச் சென்றது.

அது சென்ற தடத்தைக் கண்டு அவ்வழியே சென்று அந்த மானைப் பிடித்தான் வேடன். இருந்த இடத்தைவிட்டு வெளியேறியதால் ஏற்பட்ட விளைவு இது.

நம்முடைய செயல்களை மறைக்க முடியாதல்லவா? அவ்வாறே எண்ணங்களையும் மறைக்க இயலாது. எண்ணங்கள் செல்லுகின்ற தடத்தின் மீதுதான் செயல்களும் செல்கின்றன.

சிலந்தியும் புயலும்

ஒரு நாள் பிற்பகல் வெப்பமும் புழுக்கமும் மிகுந்திருந்தன. வெகு தொலேவில் கேட்ட இடி முழக்கமும் கொஞ்சம் கொஞ்சமாக நெருங்கி நெருங்கி வந்தது. கன்னங் கரிய மேகங்கள் அடி வானத்திலிருந்து அடுக்கடுக்காகக் குவிந்தன. புயல் வரப் போகிறது என்பதற்கான அறிகுறிகள்



எல்லாம் தோன்றின. ஒரு மரத்திலிருந்த சிலந்திப் பூச்சி தன் கூட்டின்மீது நின்றுகொண்டு புயலே விரும்பி அழைக்கின்றவன் போலவோ அல்லது புயலின் தீர்க்கதரிசிபோலவோ நடிக்க ஆசைப்பட்

டது. உடனே "நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் புயலின் காலம் வந்துவிட்டது! மின்னுகின்ற பாம்பு போன்ற மின்னலே! பளிச்சிடு! பயங்கரமான இடியே! முழங்கு. காற்றே! மழையே! விரைவில் வா. பெரும் புயல் அடித்தால் நிரம்ப நல்லது" என்று சொல்லிற்று.

புயல் வந்தது. அப்பொழுது பார்க்க வேண்டுமே சிலந்திப் பூச்சியை. பயத்தினால் அது நடுநடுங்கிவிட்டது. பெருங் காற்றினால் தாறுமாறாக அலைக்கப்பட்டு மூர்ச்சையடைந்துவிட்டது. மாலை நேரம் வந்த பிறகுதான் புயல் ஓய்ந்தது. அந்தி நேர மேகங்கள் மேற்கு வானில் அலைந்தன. சிறு பறவைகள் மாலை நேரத்தின் குளிர்ச்சியைப் பற்றிப் புகழ்ந்துகொண் டிருந்தன. இவ்வளவுக்கும் பிறகுதான் சிலந்திப் பூச்சி தன் கண்ணைத் திறந்து மரத்தைப் பார்த்தது. "இப்பொழுது மணி என்ன?" என்று கேட்டது.

உடனே மரம் அதைப் பார்த்து "என் நண்பனே! நீ மாத்திரம் இந்தப் புயலில் இன்னும் கொஞ்சம் துணிவாக இருந்திருந்தால் தீர்க்க-தரிசனம் உள்ள பெரிய கவிஞனென்று பெயர் பெற்றிருப்பாய்" என்றது.

எருமையும் இடையனும்

ஒரு ஊரில் ஒரு பொல்லாத எருமை இருந்தது. கோபம் வந்துவிட்டால் அது செய்யும் அட்டூழியம் தாங்க முடியாது. ஒரு நாள் அதற்குக் கோபம் வந்துவிட்டது. கயிற்றை அறுத்துக் கொண்டு வயல்களுக்கு ஓடி, பயிரை நாசம் செய்தது. அங்குள்ளவர்கள் ஒவ்வொருவராக அதைப் பிடிக்க முயன்றார்கள். அதைச் சூழ்ந்து வட்டமாக நின்றார்கள். கூட்டம் அதிகரிக்கவும் அதனுடைய கோபமும் கொடுமையும் அதிகமாயிற்று. தனது கொம்புகளால் பலமாகத் தாக்கி, பல மனிதர்களைக் குத்தியது. என்ன செய்தும் அவர்களால் அதை அடக்க முடியவில்லை.

அப்பொழுது நல்ல வேளையாக ஒரு மாட்டிடையன் ஓடி வந்தான். அவன் சின்னப் பையன் என்பதை எல்லோரும் கண்டார்கள். இருந்தாலும் அவன் வயதானவர்களைப் போலப் பேசினான். "நீங்கள் எல்லாம் அறிவில்லாதவர்கள்" என்று நகைத்தான். ஒன்றுமே நடவாததைப் போலச் சிரித்துக்கொண்டு எருமையின் அருகில் சென்றான். தன் கையிலிருந்த ஒரு கற்றைப் புல்லை அதன் முன்னால் அசைத்துக் காட்டினான். அதன் அருகில் நின்று அதன் முதுகைச் சொறிந்தான். அவ்வளவுதான்; எருமை சாந்தமடைந்துவிட்டது. அதன் முதுகில் ஏறிக்கொண்டு ஆரவாரத்தோடு மெதுவாக வீட்டுக்கு ஓட்டிச் சென்றான்.

அங்கிருந்த ஜனக் கூட்டம் கவலை ஒழிந்ததால் பெருமூச்சுவிட்டது. அந்த ஜனங்கள் தங்களுடைய தோல்விக்கு வெட்கம் அடைந்து "நாம் முட்டாள் தனமாக நடந்துகொண்டோம்" என்று கூறிக் கொண்டார்கள்.

வீண் புகழ்ச்சி செய்வது மற்றவர்களை அடக்குவதற்குரிய சிறந்த சாதனமாகும். இத் தகைய வழியைப் பின்பற்றி ஒரு சிறு பையன் மூர்க்கத்தனமான ஒரு எருமையை அடக்கி விட்டான். இந்த மாதிரி நாமும் செய்ய வேண்டு மென்பது கருத்தல்ல. ஆனால் நம்மிடமே யாரும் இந்தத் தந்திரத்தைக் கையாளுகிறார்களா என் பதில் நாம் கவனமாக இருக்க வேண்டும்.

பசுவும் கன்றும்

ஒரு இன்பமான வசந்த நாளன்று ஒரு உழவன் உழுவதற்காகத் தன் பசுவை வயல்களுக்கு ஓட்டிச் சென்றான். பசுவின் பின்னால் அதன் கன்றும் துள்ளிக் குதித்துச் சென்றது. பசுவின் கழுத்தில் ஏரைப் பூட்டினவுடன் பசு தன் கன்றைப் பார்த்து "என் அருமைக் கண்ணே! பக்கத்திலுள்ள புல்வெளியில் நீ தனியே சென்று விளையாடி விட்டு வா" என்றது.

ஆனால், கன்றுக் குட்டியோ தாயின்மீது அளவு கடந்த மரியாதை கொண்ட பிராணி. ஆகவே அது தன் தலையை யசைத்துவிட்டு "மாட்டேன் அம்மா! உனது கஷ்ட காலத்தில் உன்னைவிட்டுப் பிரிய மாட்டேன். கூடவே வருவேன். அப்பொழுதான் உனக்குத் துன்பம் தோன்றாது" என்று சொல்லியது.

இதைக் கேட்ட தாய் மனம் மகிழ்ந்து தன்னுடன் வர, கன்றை அனுமதித்தது. ஆனால் அது தன் வேலையோடு கன்றுக் குட்டியையும் எந்த நேரமும் கவனித்துக்கொள்ள வேண்டியதாயிற்று. தன் கன்று கீழே விழுந்துவிடுமோ அல்லது முந்திப் போய்விடுமோ அல்லது பிந்திவிடுமோ என்று கவலைகொண்டது. இந்தக் கவலை காரணமாக பசு மெதுவாகச் சென்றது. வேகமாகச் செலுத்த வேண்டி அதை உழவன் நன்றாக அடிக்கத் தொடங்கினான். முன்னைக் காட்டிலும் அதிகமாகப் பசுவுக்கு வசவும் அடியும் கிடைத்தன. முடிவாகப் பசு கன்

றைப் பார்த்து "எனது பிரியமுள்ள கண்ணே! உனக்கு என்மீது உண்மையான அன்பிருக்குமானல் நீ என்னைவிட்டு அப்புறம் செல்லுக; உன்னுல் நான் வாங்கும் அடி கணக்கில்லை" என்றது.

நண்பனே! நான் உனக்கு அறிவுரை சொல்லலாமென்ருல் இதோ ஒன்று கூறுகிறேன். நீ பிரியமாகக் கருதுகின்ற உணர்ச்சிகள் பலதிறப்பட்டதாக இருக்கலாம். ஆயினும் அவற்றை நீ அப்பால் உதறி எறிந்துவிடுவதே நல்லது.

கிழவனும் அவனது மூன்று பிள்ளைகளும்

ஒரு கிழவனுக்கு மூன்று பிள்ளைகள் இருந்தார்கள். மூத்தவன் திறமை மிகுந்த மாலுமி. உறுதியும் வீரமும் கடமைப் பற்றும் மிக்க துணிச்சலும் உடையவன். கிழவனுக்கு அவன்மீது மிகுந்த பிரியம். அவனால் தனக்குப் பெருமையும் புகழும் கிடைக்கிறது என்று எண்ணினான். ஆனால் ஒரு பெரும் புயல் அடித்ததில் அஞ்சாத அந்த வீர மகனை கொந்தளிக்கும் கடல் அலைகள் விழுங்கி விட்டன.

இரண்டாவது மகன் ஒரு சிறந்த தொழிலாளி. சலிப்பில்லாமல் கடுமையாக உழைப்பான். அவனுடன் வேலை பார்ப்பவர்களுள் அவனே வலிமையும் ஆற்றலும் மிகுந்தவன். நம்பிக்கையும் உண்மையும் வாய்ந்தவன். தோழர்களுக்கும் நண்பர்களுக்கும் உதவி செய்து மகிழ்ச்சி அடைவான். சுரங்கத் தொழிலாளிகளுள் இளமையானவர்கள் அவனது நட்பை அதிக உயர்வாய் மதித்தார்கள். தகப்பனும் அவனை நிரம்ப அன்பாக நேசித்தான். மூத்த மகன் இறந்த பிறகு இவன் மூலமாகக் கடவுள் தனக்கு பெரிதும் ஆறுதல் அளிக்கிறார் என்று கருதினான். ஆயினும் சில நாட்களிலேயே இரண்டாவது மகனும், துணிவு, சுயநலமற்ற தன்மை ஆகிய நல்ல தன்மைகளால் உயிரிழந்தான். ஒரு நாள் நிலக்கரிச் சுரங்கத்தில், முகட்டைத் தாங்கிக் கொண்டிருந்த தூண் நொறுங்கி மேலிருந்து மண் சரிந்தது. அத் தருணத்தில் இவன் ஒரு தூணைத்

தாங்கி நின்று தனது தோழர்கள் தப்பிப் பிழைக்கு மாறு செய்தான். ஆனால், அவனே அந்த மணசரி வில் அகப்பட்டு நொறுங்கிச் செத்தான்.

இப்போது தகப்பனின் கவலையை வார்த்தை களால் சொல்ல இயலாது. கற்பனை செய்துதான் உணர்ந்துகொள்ள வேண்டும். கவலையினால் ஒரே அடியாகத் தளர்ந்து மெலிந்து வாடிவிட்டான், ஆயி னும் அவனுக்கு இன்னுமொரு மகன் இருந்தான். அவன் இருப்பதுதான் தகப்பனுக்கு ஒரே ஆறுதலா யிருந்தது. இப்பொழுது அவனுடைய எண்ணங் கள் மாறிவிட்டன. தன்னுடைய இளைய மகனைச் சிறந்த வீரனாக்கக் கூடாது என்று தீர்மானித்தான். மீண்டும் மகனை இழந்தால் அந்தக் கவலையைத் தன் னால் சகித்துக்கொள்ள முடியாது என்று நினைத் தான். "இளமையில் சாகும் திறமைசாலிகளைக் காட்டிலும் நீண்ட நாள் வாழும் உதவாக்கரை மகனே போதும்" என்று நினைத்தான்.

சில பாட்டிமார் பெண்களை வளர்ப்பதைப் போல அவனை வளர்த்தான். பையனும் அன்புள்ள வனாக வளர்ந்தான். தகப்பன் எதிர்பார்த்ததற்கு மோசமில்லை. கோழைத்தனமும் சுயநலமும் உடைய வனாய் உண்மையாகவே உதவாக்கரையாய் இருந் தான். ஆனால் இதில் என்ன அதிசயம் என்றால் அந்தக் கிழவன் இதற்கு முன் அடையாத கவலையும் துயரமும் இப்போது அடைந்தான். தனது தவறை நினைத்து நொந்தான். இளைய மகனை வெறுத்தான். இருப்பினும் அவன்மீது இரங்கி "இவ்வாறு பயனற்று உதவாக்கரையாக இருப்பதைத்தான் நான் வெறுத்து வந்திருக்கிறேன். ஆனால் இப் போதோ சுயநலம் பற்றி நானே என் மகனை இவ்

வாறு வளர்த்துவிட்டேன். கடலால் மூழ்கடிக்கப் படாமலும் மலையால் நொறுக்கப்படாமலும் இருக் கிற இந்தப் பயல் எதற்காக வாழ வேண்டும்?'' என்றான்.

அந்தக் கிழவனால் இளைய மகன்மீது அன்பு செலுத்த முடியவில்லை. கொந்தளிக்கும் அலைகளை உடைய கடலையும், வான்உயர் தோற்றமும் அசை யாத நிலையையும் உடைய மலைகளையும், தனது மூத்த பிள்ளைகளைப் போன்ற மனிதர்களையுமே அவன் மனம் விரும்பிற்று. பெற்ற மனம் இப் போது வரம்பு கடந்த துயரத்தில் ஆழ்ந்தது. தனது தவறான எண்ணத்திற்கும் இளைய மகனைத் தன் கை யாலேயே கெடுத்ததற்கும் தண்டனை அடைந்தான்.

கழுகும் அதன் மகனும்

வயது சென்ற ஒரு தாய்க் கழுகு சிறிது நேரம் பறந்த பின்பு மலையுச்சியிலுள்ள ஒரு கல்லின்மீது இறங்கியது. "மிகவும் களைப்பாக இருக்கிறது. கொஞ்சம் ஓய்வெடுத்துக்கொள்ள வேண்டும்" என்று சொல்லிக்கொண்டது. உட்கார்ந்து நெடுநேரம் ஓய்வு எடுத்த பின்பும் அது பல மடைந்ததாகத் தோன்றவில்லை. நோயுற்றதாகத் தோன்றியது. இப்போது வலிமையும் இளமையும் பொருந்திய அதன் மகன் நெடுந் தூரத்திலிருந்து பறந்து வந்தது. தாய் இருக்கும் நிலைமையைக் கண்டு அதைவிட்டு நீங்காமல் பக்கத்திலேயே இருந்து உதவுவோம் என்று நினைத்தது. மகன் அருகில் இருக்க இருக்கத் தாயின் பலவீனம் மிகுந்துகொண்டே இருந்தது. அதைக் கண்ட தாய் மகனைப் பார்த்து "மகனே! இது நல்லதல்ல. நீ அன்புடன் என் அருகில் இருந்து கவனிப்பதனுல் என் களைப்பு அதிகமாகிறது. நீ என் கண் முன்னுல் துணிந்து உயரப் பறந்து செல். அதைக் காணும் எனக்குத் துணிவு உண்டாகும்" என்றது. அவ்வாறே இளங் கழுகும் துணிந்து தன் இச்சைபோல வானில் பறந்தது. தாய்க் கழுகு அதைக் கண்டு வலிவடைந்து பறக்கத் தொடங்கியது. தன் மகன்போல அவ்வளவு வலிமை பெற்று உடனேயே பறந்தது.

வயதான கிழவன் எப்படி நடப்பது என்பதை மறந்துவிட்டானுனல் அவன் செய்ய வேண்டிய

காரியம் இதுதான். இளைஞர்கள் எவ்வாறு நடக்கிறார்கள் என்பதை அவன் கவனிக்கவேண்டும். பிறகு அவனது கால்கள் தாமாகவே நகரத் தொடங்கிவிடும். அதைப்போல இளைஞர்களின் துணிவான காரியங்களைப்பற்றிக் கேட்டுக்கொண் டிருத்தல் முதியவரின் உடல்நலத்துக்கு உகந்தது. உன் முதுமைக் காலத்தில் உன் அருகில் இளைஞர்கள் இருப்பார்களானால் நீ எதைப்பற்றி பயப்பட வேண்டும்? அவர்களை இகழ்ந்து வெறுத்து எட்டத்திலிருக்கும்படி செய்வாயானால் அதுவே நீ பயப்படவேண்டிய காரியமாகும்.

அழகான சின்னப் பறவையும் அழகான ரோஜாவும்

ஒரு கொடி ரோஜா சுவரின்மீது வளர்ந்து படர்ந்திருந்தது; அதன்மீது ஒரு சின்னப் பறவை வந்து அமர்ந்தது. காலையில் எழுந்ததும் இவை இரண்டும் தங்கள் தங்கள் மொழிகளில் பாடுகின்ற பாட்டுக்களைத்தான் நாம் கேட்போம்.

"நான் ஒரு சின்னஞ் சிறு பறவை. நான் அழகானவன், அழகானவன், அழகானவன்" என்று குருவி பாடும்.

உடனே ரோஜா "நான் ஒரு ரோஜா, நான் அழகானவள், அழகானவள், அழகானவள்" என்று பாடும்.

கொஞ்ச நேரம் கழித்து, பறவை "நான் ஒரு சின்னஞ் சிறு பறவை. நான் அழகானவன், அழகானவன், அழகானவன்" என்று மீண்டும் பாடும்.

உடனே ரோஜாவும் "நான் ஒரு ரோஜா. நான் அழகானவள், அழகானவள், அழகானவள்" என்று பாடும்.

இவை இப்படியே மாறி மாறி பாடிக்கொண்டிருக்கும். அந்தப் பறவை அழகான சிறு பறவை என்பதையும், அந்த ரோஜா அழகான ரோஜா என்பதையும் நாம் அறிவோம். இருந்தாலும் அவை இவ்விதம் இடைவிடாமல் கத்திக்கொண்டிருப்பதால் அந்த இடத்தைவிட்டு வெளியேறுவதற்கு ஏதாவது காரணத்தைத் தேடும் அவசியம் நமக்கு ஏற்பட்டுவிடுகிறது.

அசல் எலி

"எல்லா எலிகளுக்கும் வால் இருப்பதைப் போலத் தனக்கும் வால் இருந்தால் அதில்என்ன புதுமை இருக்கிறது?" என்று நினைத்தது ஒரு எலி. வால் இருப்பதனால் தனக்குள்ள அலாதிச் சிறப்பைக் காட்ட முடியாதென்றும் அவ்வாறு இருப்பது தனக்கு அவமானம் என்றும் நினைத்தது. ஆகவே இதைப்பற்றி யோசித்து ஒரு முடிவுக்கு வந்து நல்லவனை ஒரு நண்டனிடம் ஓடிச் சென்று தன்னுடைய வாலைக் கடித்து எடுத்துவிடும்படியாகக் கேட்டுக்கொண்டது.

"எல்லாரும் தங்களுடைய வாலை அருஞ் செல்வமாகக் கருதுகிறார்கள். அதன் மூலமாக எல்லா நன்மையும் அடையலாமென்று ஆசைப் படுகிறார்கள். ஆயினும் எனக்கு அது வேண்டாம்" என்று தன் நண்பனிடம் சொல்லிற்று.

அந்த நண்பனுக்கோ இதனுடைய குணம் நன்றாகத் தெரியும். சிறிது காலம்கழித்து தன் நண்பன் தான் செய்த முடிவுக்கு வருந்துவான் என்பதை நன்கு அறிந்திருந்ததனால் அதனுடைய வாலில் ஒரு முடிச்சுப் போட்டு, அதைக் கடித்து எடுத்து விட்டதாகக் கூறி ஏமாற்றி அனுப்பிவிட்டது.

தனது வால்போய்விட்டதென்று நம்பிய அந்த எலி, ஆச்சரியமான புது நாகரிகத்தைத் தான் ஏற்படுத்துகிறதாக நினைத்துக்கொண்டது. அதன் மூலம் தனக்குப் பெரும் புகழ் கிடைக்கும் என்றும் எண்ணியது. அந்த எண்ணத்தோடு மற்ற எலி

களின் முன்னால் தலைநிமிர்ந்து கம்பீரமாகவும் ஒய்யாரமாகவும் பெரிய மனிதர்போல நடந்து சென்றது. அதனுடைய நண்பர்கள் முதலில் அதை ஆச்சரியத்தோடு உற்றுப் பார்த்தார்கள். பிறகு, பலவாருக ஏளனமாகப் பேசிச் சிரித்தார்கள். அந்த எலிக்கு வெட்கம் தாங்க முடியவில்லை. திடீரென்று தரை வெடித்து அதில் தான் அமிழ்ந்து விட்டால் தேவலை என்றுகூட அதற்குத் தோன்றியது. கடைசியில் தன்னுடைய திட்டத்திலிருந்து



அவமானகரமாகப் பின்வாங்க வேண்டியதாயிற்று. ஓட்டோடியும் தன் நண்பனிடம் சென்று கேலிக்கிடமான தன் நிலைமையைச் சீர்படுத்த முடியுமா என்று கேட்டது.

"வால் நீங்கியபின் நான் வெளியேறின முதல் தடவையிலேயே துரதிர்ஷ்டமும் என்னைத் தொடர்ந்து வந்துவிட்டது. ஏதாவது களிம்பு தடவி வாலை மீண்டும் முளைக்கச் செய்வாய் என்று நம்புகிறேன். அது முடியாவிட்டால் தற்கொலை செய்து

கொள்ளுவது தவிர எனக்கு வேறு வழியில்லை" என்று மனவேதனையோடு கூறியது.

அதன் நண்பன் அதனுடைய வாலிலிருந்த முடிச்சை அவிழ்த்துவிடவே, அந்த வால் பழைய நிலையை அடைந்தது. இப்பொழுதோ அந்த எலி எல்லோரையும்போலத் தனக்கும் வால் இருக்கிறது என்று பெருமை பாராட்டிக்கொள்கிறது.



குரங்குகளும் பெரு மழையும்

ஒரு சமயம் சில குரங்குகள் கூட்டமாக ஒரு உயரமான மலையில் ஏறிச் சென்றன. அந்தக் குரங்குகள் சாதாரணமாகக் காணப்படுகிற உதவாக்கரைக் குரங்குகளைப் போன்றவை அல்ல. அந்த மலையும் சாதாரணமான மலையல்ல; அதன் உச்சியில் பெரிய வழுக்கல் பாறை ஒன்று இருந்தது. அங்கிருந்து பார்த்தால், சுற்றி நெடுந் தூரம் வரை உள்ள பூமியும் ஆறுகளும் நிலப் பரப்பும், நன்ருகத் தெரியும். அந்தக் குரங்குகளைப் பிடித்த கெட்ட காலம், அவைகள் மலை யுச்சியை அடைந்ததும் அடையாததுமாக, இடியும் மழையும் வந்தன. கோழைகளை விரட்டியடிக்கிற சாதாரண மழையும் இல்லை அது. கரிய மேகங்கள் நாலா திசையிலுமிருந்து திரண்டன. கீழே நிலப்பரப்பும் மேலே வானவெளியும் கும்மிருட்டாகிவிட்டன. மின்னல்கள் இடைவிடாமல் மின்னியதால் வான முழுதும் தீப்பற்றி எரிகிறதோ என்னும்படியாகத் தோன்றியது. பூமி உடைந்து நொறுங்குகிறதோ என்னும்படியாக இடி முழங்கியது.

உண்மையாக இது மிகவும் பயங்கரமான நிலைமை. அதி மேதாவிகளான அந்தக் குரங்குகள் பயந்து நடுங்கிவிட்டன. என்ன செய்வதென்று அவைகளுக்குப் புலப்படவில்லை. மலை யுச்சியில் ஒதுங்குவதற்குக் குகையும் இல்லை. ஒளிந்துகொள்வதற்குக் காடுகளும் இல்லை. வேகமாய்க் கீழே இறங்கித் தப்பிக்கலாமென்ருல் அப்படிச் செய்ய அவைகளுக்கு மனமுமில்லை. அப்படிப்பட்ட காரியம் தங்களுடைய கௌரவத்திற்குப் பொருந்தாது என்று அவை நினைத்தன.

இனி ஒன்றும் செய்வதற்கில்லை யென்று எண்ணிக் கதறின. "இப்படிப் பயங்கரமான விதத்தில் முடிவெய்துவோம் என்று நாங்கள் நினைக்கவே இல்லை" என்று அலறின. உடனே வேறு ஒன்றையும் பற்றி நினைக்காமல் அருகருகே அணைந்து உட்கார்ந்துகொண்டு கண்களை மூடி ஓலமிட்டு அழுதன. விடாது நெடுநேரம் அழுததால் அவைகளின் துயரம் பெருகிற்று; வரவர அழுகைக் குரலும் அதிகரிக்கலாயிற்று. கிலியும் அதிகமாயிற்று. பயம் அதிகம் ஆகஆக அவைகள் அலறுவதும் பதறுவதும் அதிகம் ஆயின. அழுதழுது கண்ணீரைக் கடலாகப் பெருக்கின. முடிவிலே தங்களது அழுகைக் குரல் தவிர வேறு சத்தத்தை அவை கேட்கவில்லை. தங்கள் துயரத்தைத் தவிர வேறொன்றையும் அவை சிந்திக்கவில்லை. வெளி உலகத்தையும் மற்றக் காரியங்களையும் அவை அறவே மறந்துவிட்டன. இப்படியாக அவை அழுதுகொண்டிருக்கும்போதே மழையும் ஓய்ந்தது.

ஆகவே அவற்றின் வீரச் செயலும் ஒருவாறு ஓய்ந்தது, தங்களுடைய செயலைப்பற்றி அந்தக் குரங்குகள் பெருமை கொண்டன. அதைப் பற்றிப் பின்னால் பேச நேர்ந்தபோ தெல்லாம் "நாங்கள் ஒரு பயங்கரமான மழைக் காலத்தில் வாழ்ந்திருக்கிறோம். ஆபத்தான ஒரு மலை யுச்சியில் ஏறினோம். பெரிய ஒப்பாரி வைத்து அற்புதங்களைச் செய்திருக்கிறோம். இடியிலிருந்தும் மழையிலிருந்தும் துன்பமடையாமல் எப்படித் தப்புவது என்பது எங்களுக்குத் தெரியும்" என்று தற்பெருமையாக அவை கூறிக்கொள்வது வழக்கம்.

படகோட்டி

சீக்கிரம் கடல் பொங்கிவரும் என்பதை அறிந் திருந்த ஒரு மனிதன் ஒரு சின்னப் படகைச் செய்து கடல் பொங்கியதும் அதைஆற்றில் இறக்கி, கடலில் செலுத்தலா மென்று எண்ணினன்.

அப்படியே கடல் பொங்கியது. ஆனல் அந்த சமயம் அலை மெதுவாகப் பொங்கியது. "உயரமாக வந்த பிறகு படகை இறக்கலாம்" என்று கூறினன்.

கொஞ்சம் கொஞ்சமாக அலை உயர்ந்தது. ஆனல் அவன், "இன்னும் போதுமான அளவு அலை உயரவில்லை. உயர்ந்தவுடன் என்னுடைய படகை விடுவேன்" என்று கூறி அதைக் கரையிலே தள்ளி வைத்தான்.

அலை மேலும் மேலும் பொங்கிற்று. ஆனல் அந்த மனிதன் படகை ஆற்றங் கரையிலிருந்து அப் பால் தள்ளிக்கொண்டே போய், கடைசியில் ஒரு குன்றின் உச்சியிலே அதை வைத்தான்.

"படகைச் செலுத்துவதற்கு இது சமயமில்லை. தண்ணீர் நிரம்ப உயர்ந்துவிட்டது" என்று அப் போது கூறினன்.



மண்பாண்டம் ஏற்றிச் சென்ற மூவர்

மூன்று மனிதர்கள் மண்ணால் செய்த குடங்கள், சட்டிகள், பானைகள் ஆகியவற்றை, கைவண்டிகளில் ஏற்றி மலைப்பாதை வழியாகத் தள்ளிக் கொண்டு சென்றார்கள். அந்தப் பாதையோ உயரத்தில் ஒற்றையடிப் பாதைப் போல இருந்தது. பாதையின் ஒரு பக்கத்தில் உயரமான சிகரம்; மறு பக்கம் கிடுகிடு பாதாளம். அந்தப் பாதையில் செல்லுவது மிகவும் ஆபத்தான காரியம் என்பதில் ஐயமில்லை. இத்தனை கஷ்டங்களின் காரணமாக, சிறிது தூரம் செல்வதற்குள்ளாகவே ஒருவனுடைய வண்டி சாய்ந்து, பாரம் முழுவதும் உடைந்துவிட்டது. ஒன்றுகூட உருப்படியாகத் தேரவில்லை; இரண்டாவது மனிதன் மேலும் கொஞ்சம் அதிர்ஷ்டம் உள்ளவன்; அவன் தன்னுடைய வண்டியைப் பாதி தூரம்வரை கொண்டுபோய்விட்டான். அங்கு சென்றதும் வண்டி ஒரு பாறையில் மோதி, பார முழுவதும் விழுந்து நொறுங்கிவிட்டது; ஒன்றுகூட உருப்படியாகத் தேறவில்லை.

மூன்றாம் மனிதன் தனது வண்டியை மலையுச்சிக்குக் கொண்டுபோய்விட்டான் "ஆ, ஆ! உச்சிவரை கொண்டு சேர்த்த பெருமை எனக்குத்தான் உண்டு" என்று வியந்து கூறினான். தன்னுடைய கஷ்டம் முடிந்துவிட்டது என்று நினைத்து, பெருமூச்சுவிட்டு, சிறிதே தனது பிடியைத் தளர்த்தினான். அவ்வளவுதான். வண்டி கவிழ்ந்து அவ்வளவும் நொறுங்கிவிட்டது.

இவ்விதமாக மூவருடைய பாத்திரங்களும் நொறுங்கிவிட்டன. அதை மறுப்பதற்கில்லை. இருந்தாலும் அவர்கள் சிறிதும் மனம் தளராமல் தலையாட்டிக்கொண்டும் சிரித்துக்கொண்டும் தங்களுடைய சாதனைகளை ஒப்பிடத் தொடங்கினர்கள். மலையுச்சியில் அமர்ந்து உரையாடினர்கள்.

முதல் மனிதன் "அதிக தூரம் வண்டியைக் கொண்டு போகாதவன் நான்தான். இருந்தாலும் நான் நிரம்பக் கஷ்டப்படவில்லை, அதிகமாகக் கஷ்டப்படாதவர்கள் யார் என்று பார்த்தால் அந்த வரிசையில் நான்தான் முதன்மையாக நிற்கிறேன்" என்று சொன்னன்.

இரண்டாவது மனிதன் "வருத்தப்படுவதற்கு எனக்கு ஒன்றுமில்லை. பாதி வழிவரையும்தான் நான் சிரமப்பட வேண்டியதாயிற்று. பாதி வழி வரைக்கும், வண்டியைக் கொண்டுவருவதில் நான் வெற்றியடைந்துவிட்டேன். நான் எந்த வகையிலும் மோசமில்லை" என்று சொன்னன்.

"ஆனல் நான் ஒருத்தன்தான் வண்டியை உச்சிவரை கொண்டுசென்றவன். அதுவே என்னுடைய பெருமையாகும்" என்று கூறினன் மூன்ருவது மனிதன்.

முடிவில் மூன்று பேரும் மகிழ்ச்சி யடைந்தார்கள். "நம்மில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு சிறப்பு இருக்கிறது; சட்டி பானைகளை இழந்ததில் நாம் எல்லோரும் ஒன்றுதான்; வேறு வகையில் பார்த்தால் நாம் ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையில் சிறந்தவர்கள்" என்று கூறித் தங்களுடைய வண்டிகளை வீடு நோக்கித் தள்ளிக்கொண்டு சென்றர்கள்.

மூன்று அழுகல் பழங்கள்

ஒரு மரத்தி லிருந்த மூன்று பழங்களைப் பறிக்காமல் விட்டுவிட்டார்கள். அவை கனிந்து அழுகிவிட்டன.

திடீரென்று காற்றடித்து, அவை மூன்றும் கீழே விழுந்தன; துரதிர்ஷ்டவசமாக அவை மூன்றும் ஒரே இடத்தில் விழ நேர்ந்தது; ஒன்றையொன்று மோதி



யும் தள்ளியும் தாறுமாறாய் திட்டிக்கொண்டன. கடைசியாக ஒன்றையொன்று பற்றி இழுத்து ஒரு பறவையிடம் சென்று தங்களுக்கு நீதி வழங்குமாறு முறையிட்டன.

"நீங்கள் எவ்வாறு ஒன்று சேர்ந்தீர்கள்? ஏன் சண்டைபிடித்துக்கொள்கிறீர்கள்? இந்த விஷயங்களை அறியாமல் நான் எப்படி உங்களுக்குத் தீர்ப்

பளிப்பது? எனக்குத் தெரிந்த மட்டும் சொல்கிறேன் கேளுங்கள்: நீங்கள் மூவரும் அழுகல் பேர்வழிகள். நீங்கள் சண்டை போடப் போட உங்கள் அழுகலும் அதிகமாகும். இதுதான் நான் சொல்லக் கூடியது" என்றது அந்தப் பறவை.



பூனையும் பானையும்

அடுக்களை அலமாரியில் ஏதாவது உணவு இருக்குமா என்று பார்ப்பதற்காக ஒரு பூனை அங்கே தாவிற்று. மூடியில்லாத ஒரு சட்டியை முதலில் கண்டது. அதனுள் ஒன்றுமில்லை என்பதைக் கண்ட பூனை "இந்தச் சட்டியினுள்ளே எட்டிப்பார்க்க வேண்டிய அவசியமே இல்லை. இதில் ஒன்றுமே இருக்க முடியாது" என்றது. அடுத்தாற்போல் மூடியுள்ள மற்றொரு சட்டியைக் கண்டு, அதை நெடு நேரம் உற்றுக் கவனித்தது; கவனிக்கக் கவனிக்க ஒரு பக்கம் ஆசை வளர்ந்தது. ஆகவே துணிந்து அதன் மூடியை எடுத்துப்பார்த்த பொழுது உள்ளே ஒன்றுமே இல்லை.

பூனை பெரிதும் ஏமாற்றம் அடைந்தது. "இவையெல்லாம் உள்ளே ஒன்றும் இல்லாதவை. தங்களிடம் சரக்கு ஒன்றும் இல்லாதபோது அதை அப்படியே சிலர் வெளிப்படையாகச் சொல்லுகிறார்கள்; அவர்களுடைய செயல் பொருத்தமானதாக இருக்கிறது. உள்ளே சரக்கு ஒன்றும் இல்லாத மற்றும் சிலரோ ஆழமும் நுட்பமும் பொருந்திய அறிவாளிகள் போலவும் தெரியாத விஷயங்களைத் தெரிந்தவர்கள் போலவும் வேண்டுமென்றே பாவனை செய்கிறார்கள். அவர்களிடமுள்ள அபூர்வமான விஷயங்களைக் கண்டறிவதற்காக மற்ற மனிதர்கள் நேரத்தை செலவிடும்படியாகவும் செய்கிறார்கள். முடிவில் பார்த்தால் பலன் ஒன்றும் இராது" என்று ஏக்கத்துடன் அந்தப் பூனை கூறியது.

சீனத்து நீதிக்கதைகள்





புதுமைப் பதிப்பகம் பிரைவேட் லிமிடெட்

காரைக்குடி